வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 04.05.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 154 | பக்கங்கள் : 16




## ஜெனிவா தீர்மான நடைமுறைகள் குறித்து அமெரிக்கா - பிரிட்டன் தீவிர ஆலோசனை

ஜெனிவா, மே 04

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பிரிட்டனும், அமெரிக்காவும், தீவிரமாக கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன என இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவா தீர்மானம் தொடர்பாக கூட்டாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, இரு நாடுகளும் ஆலோசித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக சிலர் மீது பயணத் தடை விதிக்கப்படக் கூடும் என்றும் இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே அமெரிக்கா முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர் மீது பயணத் தடைகளை விதித்திருக்கின்றது. மேலும் சிலருக்கு பயணத் தடைகள் விதிக்கப்படலாம் எனவும், அது தொடர்பாக ஆராயப்பட்டுவருவதாக வும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், இது தொடர்பான 15

## பிரதமரை கூட்டமைப்பு சந்தித்துப் பேச திட்டம்

கொழும்பு, மே 04

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவது தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தவுள்ளனர்.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் இன்றும், நாளையும் நடைபெறவிருப்பதால் அந்த நேரத்தில் பேச்சுக்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சுறுத்தும் புத்தாண்டு கொத்தணி

## 1,923 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, மே 04

**இலங்கையில் நேற்று மாத்திரம் 1,923 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இவர்கள் அனைவரும் புத்தாண்டு கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.**

இதன்படி, நாளொன்றுக்கு அதிகபட்ச கொரோனா நோயாளர்கள் நேற்றுப் பதிவாகினர் எனவும் அவர் குறிப்பிட்டார். நேற்று பதிவான கொரோனா தொற்றாளர்களில் 10 பேர் வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்கள்.

இதனடிப்படையில் இலங்கையில் இதுவரையில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 628 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இலங்கையில் நேற்று மேலும் 967 கொரோனா தொற்றா ளர்கள் குணமடைந்தனர் என சுகாதார 15

## யாழ்.பல்கலை. மாணவன், ஆசிரியர் உட்பட வடக்கில் மேலும் 14 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மே 04

வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுத் திங்கள்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 404 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 14 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

கொடிகாமம் வர்த்தகத் தொகுதியில் வர்த்தகர்கள், பணியாளர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் 15



## கசூரினா கடற்கரைக்கு மக்கள் செல்வதற்கு தடை!

யாழ்ப்பாணம், மே 04

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு மக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மறு அறிவித்தல் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்று காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

அதிகரித்துவரும் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காரை 15

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, மே 04

பாராளுமன்றக் கூட்டத் தொடர் இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகும்போது தற்போதைய கொரோனா நிலை தொடர்பாக முக்கியமாக விவாதிக்கப்படவிருக்கின்றது. இந்த விவாதம் மதியபோசனத்துக்காக இடைநிறுத்தப்படாமல் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வார பாராளுமன்றக் கூட்டத் தொடர் இரண்டு நாட்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

இன்று காலை 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடும் போது, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் 15

## நேற்று 13 கொரோனா மரணங்கள்

கொழும்பு, மே 04

கொரோனா தொற்றினால் இலங்கையில் நேற்றைய தினம் 13 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கொரோனாவினால் இலங்கையில் மரணமானவர்களின் தொகை 709 ஆக அதிகரித்துள்ளது.

அண்மைக்காலத்தில் ஒரே நாளில் அதிகளவானோர் பலியாகியிருப்பது இதுவே முதல் முறை. நேற்று மரணமடைந்தவர்களில் 42, 44 வயதானவர்களும் உள்ளடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## அரசியல் ரீதியான மோதலை நாங்கள் கைவிடுகின்றோம்!

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே 04

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றுநோய் நெருக்கடியை கருத்தில் கொண்டு அரசியல் ரீதியான மோதல்களைக் கைவிடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களை தொற்று நோயிலிருந்து காப்பாற்ற அரசும் ஏனைய கட்சிகளும் தங்க ளால் முடிந்த 15

## கொடிகாமம் சந்தை மூலம் புதிய கொத்தணி அபாயம்!

### தடுக்க உதவுமாறு அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 04

தென்மராட்சி - கொடிகாமம் சந்தை வியாபாரிகள் சிலருக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில், அவர்களுடன் மேலும் பலர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இதனால் ‘கொடிகாமம் சந்தை கொத்தணி’ உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

கொடிகாமம் சந்தைப் பகுதியில் வர்த்தகர்கள் நால்வருக்கும், பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்குமாக நேற்று ஐந்து பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது இதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தை வியாபாரிகளிடையே 15

## இந்திய பயணிகள் வருகையை நிறுத்த முடியாது

கொழும்பு,மே 04

இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதை நிறுத்த முடியாது. அவ்வாறு நிறுத்துவதாக இருந்தால், அதுதொடர்பான தீர்மானத்தை சுகாதாரப் பிரிவினரே மேற்கொள்ள வேண்டும். என்றாலும், தற்போது அறிமுகப்படுத்தியுள்ள கடுமையான சுகாதார வழிகாட்டல்கள் காரணமாக சுற்றுலாப் 15

ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத்தவறிய

## பூஜித் மற்றும் ஹேமசிறிக்கு எதிராக 800 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, மே 04

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் 800 குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, மேல் நீதிமன்றில் முன்வைத் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசூரினா...

நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் கோவிட் 19 தடுப்பு வாரம் நேற்று ஆரம்பமானது.

சுகாதாரப் பிரிவினருடன் பொலிஸ ார், இராணுவம் என்பன இணைந்து முன்னெ டுக்கப்பட்ட இந்தக் கண் காணிப்பு நடவடிக்கையின் போது, கசூரினா கடற்கரையில் நூற் றுக்கணக்கானவர்கள் கூடியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இவர்களில் பலர் சுகாதார விதிகளை மீறி நடந்து கொண்டமை அவதானிக்கப் பட்டது. இதையடுத்து காரைநகர் கசூரினா கடற்கரை பகுதியில் மக்கள் ஒன்றுகூடவும், அங்கு செல்லவும் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட் டது.

மேலும், கொரோனா கட்டுப்பாட்டு செயல்பாடு ஒரு வாரத்துக்கு தொடரும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி தெரி வித்தார். (ஐ)

## 1923...

அமைச்சு தெரி வித்துள்ளது. இதன்படி, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 98 ஆயிரத்து 209 ஆக உயர்வடைந்தது.

அத்துடன் 834 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண் காணிப்பில் உள்ளனர். இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி இது வரை 696 பேர் உயிரிழந்தனர். (எ)

## இந்திய...

பயணிகளில் வருகை பாரியள வில் குறைவடைந்துள்ளது என சுற்று லாத்துறை அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் இந்தியாவில் தீவிரமாகப் பரவிவரும் நிலையில் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக் குள் வருவதை நிறுத்துவதற்கு எடுத்திருக் கும் நடவடிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் கொரோனா தொற்று கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில் அங்கிருந்து எயார் பபல்ஸ் திட்டம் முறையில் இலங்கைக்கு வருவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து தருமாறு நாங்கள் தான் இந்தியாவிடம் கோரியிருந்தோம்.

என்றாலும் இந்தத் திட்டம் ஆரம் பித்து சில தினங்களில்தான் இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று மோச மான நிலை ஏற்பட்டது. இதனால் தற் போது நாங்கள் நிலைமையை உணர்ந்து இந்தியாவிலிருந்து சுற்றுலாப் பயணி களை அழைத்து வருவதைக் குறைத்திருக் கின்றோம். அவர்கள் இலங்கைக்குள் வரமுடியாத வகையில் எமது கட்டுப் பாடுகளை அமைத்திருக்கின்றோம்.

அத்துடன் சுற்றுலா பயணிகளின் வருகையை திடீரென எந்த நாட்டுக்கும் நிறுத்த முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால், சுகாதாரப் பிரிவினர் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு குழு இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவேண் டும். என்றாலும் எயார் பபல்ஸ் முறையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கட்டுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அத்துடன் இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வருவதாக இருந்தால் அவர்கள் எமது நாட்டில் தங்குவதற்கு ஹோட்டல் ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு ஹோட்டல் வசதிகளை வழங்குவதற்கு அதிகமானவர்கள் மறுப்பு வெளியிட்டுள்ளனர்.

அதனால், அவர்களின் வருகை குறை வடைந்துள்ளது. அதேபோன்று இந்தியாவுக்கான படகு போக்குவரத்தும் குறைந்துள்ளது. அதேபோன்று இந்தியா வுக்கான ஏற்றுமதிகளும் குறைவடைந் துள்ளன- என்றார். (எ)

## யாழ்...

நால்வருக்கு தொற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டது. சாவகச்சேரி உள்ளூ ராட்சி சபை உறுப்பினர் ஒருவருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட் டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவர் தொற்றாளர்க ளாக அடையாளம் காணப்பட்டனர். இவர் களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிப்பட்டவர்கள், மற்றொருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மானிப்பாயில் நிறு வன ஊழியர்களிடம் எழுமாறாக முன் னெடுக்கப்பட்ட பரிசோதனையில் நிதி நிறுவன ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

மாங்குளம் ஆதார வைத்தியசாலை யில் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டி சென்று திரும் பிய ஆசிரியர் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா பூவரசங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒரு வருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத் தல் விடுதியில் கண் காணிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட் டது என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## கொடிகாமம்...

கடந்த மாதம் 28ஆம் திகதி எழுமாற் றாக பி.சி.ஆர். பரிசோதனை செய்யப் பட்டது. இதில் வியாபாரிகள் இருவருக் கும், அப்பகுதி வர்த்தகர்கள் இருவருக்கு மாக நால்வருக்கு தொற்று உறுதி செய் யப்பட்டது. இதையடுத்து அப்பகுதி முடக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தொற்றாளர்களுடன் தொடர்புடைய வர்களுக்கு நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோத னையில் நேற்று ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, நேற்றைய தினம் 154 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது. இதன் முடிவுகள் கிடைக்கும்வரை கொடிகாமம் சந்தை, அதனை அண்டிய வர்த்தக நிலை யங்களை முடக்கி வைக்க சுகாதாரப் பிரிவு முடிவு செய்துள்ளது.

அத்துடன், கொடிகாமம் சந்தை மற்றும் அதனை அண்டிய வர்த்தக நிலை யங்களுடன் தொடர்பு கொண்டவர் களை பிரதேசத்திற்கான சுகாதார பரிசோதகர்களுடன் அல்லது 021 227 0014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும். அவர்கள் தம்மை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறும் சுகாதாரப் பகுதியி னர் அறிவித்துள்ளனர். (ஐ)

## ஜெனிவா...

மேலதிக தகவல்கள் ஏதும் வெளியாக வில்லை. முன்னதாக ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புக்களின் உயர் அதிகாரி களும் இந்த தீர்மானத்தினை நடை முறைச்சாத்தியமாக மாற்றுவதற்கான நட வடிக்கைகள் தொடர்பில் கலந்துரை யாடி இருந்தன.

எவ்வாறாயினும், இந்தச் செயல்பாடு கள் அனைத்தும், அரசாங்கத்தினை தொடர்புபடுத்தாது, அரச சார்பற்ற மற்றும் சிவில் சமூகத்தின் ஊடாக முன்னெடுப்பதே திட்டமாக உள்ளது.

அதேவேளையில், முன்னாள் இராணுவ அதிகாரிகளுக்கு சிவில் மற்றும் இராஜதந்திரப் பதவிகளை வழங்குவது குறித்தும் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் கடும் அதிருப்தியடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ரூ. 8 இலட்சம் பெறுமதியான

# போலி நாணயத்தாள்களுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது!



கிளிநொச்சி, மே 04

போலி நாணயத்தாள்களுடன் கிளி நொச்சியில் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார். அவரிடம் இருந்து 8 இலட் சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆயிரம் ரூபாய் போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் போலி நாணயத் தாள் களை சந்தேகத்துக்கு இடமான முறை யில் கொண்டு சென்றுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர் கிளிநொச்சி - சாந்தபுரம் பகுதியை சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது.

சந்தேகநபர் பொலிஸ் விசாரணை களின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# "முதலாம் கட்ட தடுப்பூசி 3 மாதங்களே பாதுகாப்பு"

கொழும்பு, மே 04

கொரோனா தடுப்பூசி ஏற்றும் முத லாம் கட்டம் மூலம் மூன்று மாதங்கள் செல்லும் வரை கொரோனா வைரஸ் தொற்றும் வேகம் குறைவாகும். அத்து டன் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட முதிய வர்கள் அதன் இரண்டாம் கட்ட தடுப் பூசியை பரிந்துரைக்கப்பட்ட காலத்தி லேயே ஏற்றிக்கொள்ளவேண்டும் என சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியை நீலிகா மலவிகே தெரிவித்தார்.

கொரோனா தடுப்பூசி ஏற்றிக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா தடுப்பூசி ஏற்றிய முத லாவது கட்டத்தின் மூலம் மூன்று மாதங்கள் வரைக்கும் கொராானோ வைரஸ் தொற்றும் வேகம் குறைவாகும். ஒருவேளை கொரோனோ வைரஸ் தொற்று ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவாகும். என்றாலும் அதன் முழுமையான பாதுகாப்பு கிடைப் பது அதன் இரண்டாவது கட்ட தடுப்பூசியை ஏற்றிய பின்பாகும்.

மேலும் கொரோனா தடுப்பூசி அஸ்ராஸெனேகா முதலாவது கட்ட தடுப்பூசி ஏற்றிக்கொண்டுள்ள முதியவர் கள் அதன் இரண்டாவது கட்ட தடுப் பூசியை பரிந்துரை செய்யப்பட்ட காலத்திலேயே பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

அத்துடன் அஸ்ராசெனே முதலாவது கட்ட தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட 30 முதல் 40 வயது வரையானவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தாலும் வயது முதிந்தவர்களுக்கு குறிப்பிடத்தக்க வகையில் இவ்வாறு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதை காணமுடியாமல் இருக்கின்றது- என்றார். (எ)

## அரசியல்...

அனைத்தையும் செய்ய வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயால் நாடு ஸ்தம் பித்துள்ளது என சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ , நாட்டின் இரண்டு கோடி மக்களின் உயிரைக் காப்பாற்றுவதே இப்போது முக்கியம். என்றார். இதனால் அரசியல் ரீதியான மோதல்களை கைவிட்டு அனைத்து அரசியல்வாதி களும் தொற்று நோயை ஒழிக்கும் வேலைத்திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்று நோய் நெருக்கடி யால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான தடுப்பூசிகளைப் பெறவும் மருத் துவ உபகரணங்களை அணுகு வதற்கும் சர்வதேச நாடுகள் உதவ வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கான வெளி நாட்டு தூதர்களிடம் தொலைபேசி ஊடாக அவர் நேற்றுமுன்தினம் இந்த விசேட கோரிக் கையை விடுத்தார். தனது கோரிக்கைக்கு சாதகமான பதில்கள் கிடைத்தன என்றும் அவர் கூறினார்.(ஐ)

## பூஜித்...

துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களை இரண்டு விஷேட நீதிமன்றங்களில் அவர் முன்வைத்துள்ளார்.

கொலை, கொலை முயற்சி மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறி யமை போன்ற குற்றச்சாட்டுக் களும் இவற்றில் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## இன்று...

சட்டம் நிறைவேற்றப்பட விருக்கின் றது. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 11.00 மணி முதல் தற்போதைய கொரோனா நிலை குறித்து ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும். மாலை 5.00 மணிவரையில் மதியபோசன இடை வேளை கூட இல்லாமல் இந்த விவாதம் இடம்பெறும்.

நாளை புதன்கிழமை சர்ச்சைக்குரிய கொழும்பு துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து விவா தம் இடம்பெறவிருக்கின்றது. காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை இந்த விவாதம் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

சட்டத்துறை பட்டதாரி, ஊடகவியலாளர், மனித உரிமை செயல்பாட்டாளர் என்று பல்வேறு முகங்களைக் கொண்ட சர்ஜூன் ஜமால்தீன் எழுதிய 'சாட்சியமாகும் உயிர்கள்' என்ற 787 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றை கையில் எடுத்தபோது, இத்தனை பெரிய நூலை யார் படிக்கப்போகிறார்கள் என்ற எண்ணமே என்னுள் வந்தது.

மொழியால் ஓரினமாகியபோதிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் தம்மை தனித் தனித் தேசிய இனங்கள் என்றே அடையாளப்படுத்துகின்றனர். இலங்கையில் சிறுபான்மையினரான இவ்விரு இனத்தவர்களும் தமக்கிடையே ஒற்றுமையாக பயணித்து தத்தமது உரிமைகளை அடைவதை விடுத்து இருவேறு பாதைகளில் பயணிப்பது குறித்து பலரும் அவ்வப்போது தமது வருத்தங்களைப் பதிவுசெய்திருக்கின்றனர்.

அண்மைக்காலமாக முஸ்லிம் இனத்திற்கு எதிராக சிங்கள கடும்போக்குவாதிகள் பல்வேறு முனைகளிலுமிருந்தும் தாக்குதல்களை தொடுத்து வருவதை காண்கின்றோம். 'சாட்சியமாகும் உயிர்கள்' என்ற இந்த நூல் தமிழ்- முஸ்லிம் சமூகங்களிடையே இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களை விபரிக்கும் ஒரு வரலாற்று நூலாக வெளிவந்திருக்கின்றது.

இத்தனை பெரிய நூலை எவர் படிக்கப்போகிறார்கள் என்ற எனது சந்தேகத்தை ஆரம்பத்தில் பதிவுசெய்திருந்தேன். ஆனால், அதனை திறந்து படிக்கத் தொடங்கியதும் அது சொல்லும் செய்திகள் வியப்பாகவும், அதிர்ச்சி தருவனவாகவும் இருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் குறித்து இதுவரை எந்தவொரு நூலும் முழுமையாக வந்ததாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்ட தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாகட்டும், ஏன் யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு சம்பவமாகட்டும் இவை எதைப் பற்றியும் சரியான வரலாறு எழுதப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணம் பொது நூலகம் மே 31இல் எரிக்கப்பட்டதா அல்லது ஜூன் 1ஆம் திகதி எரிக்கப்பட்டதா என்று அண்மையில் முகநூலில் மிகப்பெரிய கருத்து யுத்தமே நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் நடந்து முடிந்த தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாறு என்பது எந்தக் காலத்திலும் உண்மையான வரலாறாக எழுதப்படுமா என்பது கேள்விக்குரியதே.

'எனது சாட்சியங்கள்' என்ற தலைப்பில் மயிலிட்டி புஸ்பராஜா ஆயுதப்போராட்ட வரலாற்றை பதிவுசெய்ய முயன்றிருந்தார். ஆனாலும், அது முழுமையானதா அல்லது அதில் சொல்லப்பட்டவற்றில் பெரும்பகுதி அவரின் ஊகங்களாகவே இருந்தன.

சமகாலத்தில் பலரும் தமது சுயசரிதைகளை எழுதியுள்ள போதிலும் அவையும் அவரவர் சுய விருப்பு, வெறுப்புக்களை பிரதிபலிக்க உதவியுள்ளனவே தவிர, அவை வரலாற்றை பதிவு செய்தனவா என்பதும் கேள்விக்குரியதே. நடந்து முடிந்த ஆயுதப் போராட்டத்தில் பங்குகொண்டவர்கள்- சேர்ந்து பயணித்தவர்கள் ஒரு சிலரே இப்போது உயிரோடு இருக்கின்றனர். அவர்களாவது தமது காலத்தில் தமக்குத் தெரிந்த, தாம் சந்தித்த வரலாற்றை பதிவுசெய்ய முன்வரவேண்டும்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமான முறுகல், அல்லது முரண்பாடு என்று சொன்னதும் நமக்கு நினைவுக்கு வருவது யாழ்ப்பாணத்திலிருந்து ஒட்டுமொத்தமாக முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் இரவோடு இரவாக அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றியதுதான். புலிகளை மாத்திரமே நாம் முஸ்லிம்களுக்கு எதிரான ஆயுத இயக்கமாக நம் மனங்களில் பதிவுசெய்து வைத்திருக்கின்றோம். புலிகளை மாத்திரமே ஏதோ முஸ்லிம்களுக்கு எதிரான இயக்கமாக நினைப்பதற்கு அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் வெளியேற்றியமையையும் காத்தான்குடி பள்ளிவாசலில் நூற்றுக்கணக்கானவர்களை படுகொலை செய்தமையையும் நினைவில் வைத்திருக்கின்றோம்.

ஆனால், ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி ஐந்திலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையை- படுகொலைகளை ஆரம்பித்தது என்ற தகவலை இந்த 'சாட்சியமாகும் உயிர்கள்' நூல் பதிவுசெய்கின்றது.

14.04.1985இல் அக்கரைப்பற்று நகரத்திற்கு அருகில் சுற்றிவர தமிழ்க் கிராமங்களைக் கொண்டிருந்த புட்டம்பை என்னும் பாரம்பரிய முஸ்லிம் கிராமம் முற்றாக அழிக்கப்பட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினரால் மிகப்பெரிய படுகொலை நிகழ்த்தப்பட்ட வரலாற்றை அந்த நூல் பதிவுசெய்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை யாழ்ப்பாணத்திலிருந்து இனச்சுத்தகரிப்பு செய்வதற்கு முன்னரே ஈ.பி.ஆர்.எல்.எவ். புட்டம்பை கிராமத்தை சுத்திகரிப்பு செய்தது என்கிறது 'சாட்சியமாகும் உயிர்கள்' நூல். இத்தனைக்கும் இந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். உட்பட பல தமிழ் இயக்கங்களில் ஆரம்ப காலங்களில் பல முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து போராடினார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழ்- முஸ்லிம் சமூகங்களிடையே ஏற்பட்ட இந்த விரிசலுக்கான காரணங்களை தேடிக்கொண்டிருக்காமல், இனியாவது நடந்து முடிந்த தவறுகளை சரிசெய்துகொண்டு மொழியால் ஒன்றான இரண்டு இனங்களும் ஒன்றாக பயணிக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.

- ஊர்க்குருவி.

# பொலிஸார் என்று கூறியோரால் 30 பவுண் நகைகள் கொள்ளை!

### வவுனியாவில் நேற்று சம்பவம்

வவுனியா, மே 04

வவுனியாவின் இருவேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 30 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டன.

நேற்று வவுனியா நகர் மற்றும் தேக்கவத்தை பகுதிகளில் உள்ள வீடுகளிற்கு சென்ற இனம் தெரியாத நபர்கள், தங்களை பொலிஸார் என கூறியுள்ளனர். பின்னர் வீட்டில் சோதனைசெய்வது போல பாசாங்கு செய்துவிட்டு இரு வீடுகளிலிருந்து 30 பவுண் தங்க ஆபரணங்களை களவாடிக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# விதிகளை கடைப்பிடிக்காத கள்ளு தவறணைக்கு பூட்டு!

யாழ்ப்பாணம், மே 04

சுகாதார விதிகளை பின்பற்றாமல் கும்பலாகக் கூடியிருந்து கள்ளு அருந்த அனுமதித்த தவறணை 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கோவிட் - 19 கட்டுப்பாட்டு வாரம் நேற்று ஆரம்பமானது. சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, பிரதேச செயலகம், பொலிஸ், படையினர் இணைந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். வீதிப் போக்குவரத்து கண் காணிப்பின் போது மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.



கண்காணிப்பின்போது, சுகாதார விதிகளை மீறி தவணை ஒன்றில் கும்பலாக அமர்ந்து கள்ளு அருந்தியமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு கள்ளு அருந்தியவர்கள் எச்சரிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். கும்பலாக அமர்ந்து கள்ளு அருந்த அனுமதித்த தவறணை தனிமைப்படுத்தல் நெறிமுறைகளுக்கு அமைய 14 நாட்களுக்கு மூடப்பட்டது. (ஐ)

# தொற்றுக்குள்ளாகி வீடுகளில் இருப்போருக்கு தொலைபேசி இலக்கம்

கொழும்பு, மே 04

கொவிட் -19 தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டு, சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்து செல்ல தாமதமாகும் பட்சத்தில், அது குறித்து அறிவிக்க புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, 1906 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புக்கொண்டு, கொவிட் தொற்றாளர்கள் தொடர்பான அவசர தகவல்களை அறிவிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மட்டக்களப்பில் நேற்று 13 பேருக்கு தொற்றுறுதி

மட்டக்களப்பு, மே 04

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் ஐவர் உட்பட மாவட்டத்தில் 13 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர் என்று மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் நேற்று அன்ரிஜென் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட கூழாவடி பகுதியில் இன்று அன்ரிஜென் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் திசவீர சிங்கம் சதுக்கம் பகுதியில் 11 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்து இன்று காலை அப்பகுதியை சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய பகுதிகளில் சந்தேக நபர்களாக இனங் காணப்பட்டவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போதே ஐவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதேநேரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் மொத்தமாக, 13 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# குருக்கள்புதுக்குளத்தில் 100 பேருக்கு பி.சி.ஆர்.!

வவுனியா, மே 04

வவுனியா குருக்கள்புதுக் குளம் பகுதியை சேர்ந்த 100 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பல் வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில், குருக்கள் புதுக்குளம் பகுதியில் இரு தினங்களிற்கு முன்னர் இரண்டு பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் கிராமத்தில் இடம்பெற்ற சில நிகழ்வுகளிலும் கலந்துகொண்டிருந்தனர்.

இதையடுத்து குறித்த இரு வருடனும் தொடர்புகளை பேணிய 100 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. அத்துடன், கிராமத்தில் தொற்று நீக்கல் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.05.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, சித்திரை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# இலங்கையின் ஊடக சுதந்திரம்

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடக சுதந்திரம் தொடர்பில் பலரும் பேசுவதும், தமது கரிசனையை வெளிப்படுத்துவதும் பொதுவான ஒன்றுதான். இலங்கையின் ஊடக சுதந்திரம் தொடர்பில் நீண்ட விவாதமுண்டு. பல ஊடகவியலாளர்கள் கொலப்பட்டிருக்கின்றனர். சிலர் காணாமல் போயிருக்கின்றனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தனது அரசாங்கம் எப்போதும் ஊடக சுதந்திரத்தை பாதுகாக்குமென்று தெரிவித்திருக்கின்றார்.

அண்மைக்காலமாக, ஊடக சுதந்திரம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. குறிப்பாக, முகநூல் பதிவுகள் கண்காணிப்பின்கீழ் வைக்கப்பட்டுள்ளதான தோற்றமொன்றும் தெரிகின்றது. நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கண்காணிப்புக்கள் இருப்பது தவறான ஒன்றல்ல. ஆனால், அவ்வாறான கண்காணிப்புக்கள் அரசியல் மயப்படுத்தப்படும்போதே பிரச்னைகள் எழுகின்றன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதாக கூறினாலும்கூட, தமிழ் ஊடக தரப்பினர் மத்தியில் ஒருவித இனப்புரியாத அச்சம் காணப்படுகின்றது. அச்ச மனநிலை ஏன் தோன்றுகின்றது? இதனைப் போக்கவேண்டியது யாருடைய பொறுப்பு?

உண்மையில், இவ்வாறான அச்ச மனோநிலை தோன்றுவதற்கு, ஒவ்வோர் அரசாங்கங்கமும் கடைப்பிடிக்கும் மாறுபட்ட கொள்கை நிலைப்பாடுகளும், அணுகுமுறைகளுமே காரணமாகும்.

நல்லாட்சி அரசாங்கமாக தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட அரசாங்கமானது, சில விடயங்களில் மாறுபட்ட கொள்கை நிலைப்பாட்டை கடைப்பிடித்திருந்தது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தடைவிதித்திருந்த, சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சிநிரலுக்கு துணைபோனவர்கள் என குற்றம்சாட்டப்பட்டு, தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரோடு நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் வெளிப்படையான தொடர்புகளை பேணியிருந்தனர். அரசியல் தீர்வு தொடர்பான கலந்துரையாடல்களில் உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் வெளிப்படையாகவே பங்குபற்றியிருந்தனர். ஆனால் தற்போது, பொதுஜன பெரமுன அரசாங்கம், மீளவும் குறித்த அமைப்புக்கள்மீது தடைகளை விதித்திருக்கின்றது. தடைகள் நீக்கப்படும்போது, குறித்த அமைப்புக்களுடன் பலரும் உறவுகளை பேணுகின்றனர். தற்போது மீளவும் தடை விதிக்கப்பட்டிருக்கும் பின்புலத்தில், அவ்வாறு தொடர்புகளை பேணியவர்கள் அச்சத்திற்குள்ளாகியிருக்கின்றனர். உண்மையில், இதற்கு அரசாங்கங்கள் கடைப்பிடிக்கும் மாறுபட்ட கொள்கை நிலைப்பாடுகளே காரணமாகும்.

அதேபோன்று, முன்னைய அரசாங்கம் மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவுகூர்வதற்கு அனுமதித்திருந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில், சுமந்திரனைத் தவிர, ஏனைய அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுமே குறித்த துயிலுமில்லங்களுக்கு சென்றிருக்கின்றனர். தற்போது மீளவும் அவற்றுக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. இதுதவிர, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அஞ்சலி செலுத்தியிருக்கின்றனர். பாராளுமன்ற சிறப்புரிமையின்கீழ் அவை அனுமதிக்கப்படுகின்றன. இந்த விடயங்களில் அரசாங்கத்திடம் ஒரு கொள்கை நிலைப்பாடு இருக்கவேண்டும். ஒருசிலர் அதனை செய்யலாம் - சிலர் அதனை செய்யக்கூடாதென்று தடைகளை ஏற்படுத்தும்போது, அதுவே குழப்பங்களுக்கு வழிவகுக்கின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் ஒரு தெளிவான கொள்கை நிலைப்பாடிருப்பது அவசியம். வெறுமனே அரசியல் நிகழ்ச்சிநிரலுக்காக, இவ்வாறான விடயங்களை பயன்படுத்த முற்படும்போது, அதுவே ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலாகவும் மாறுகின்றது.

# புதிய தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின்

- அலசுவது இராஜதந்திரி -



உயிருக்கு உயிராக தமிழை நேசித்த முன்னாள் தமிழக முதலமைச்சர், கலைஞர் மு. கருணாநிதியின் புதல்வாரன மு. க. ஸ்டாலின், தமிழக மாநிலத்தின் புதிய முதலமைச்சராகின் றார். தமிழை உயிருக்கு உயிராக நேசித்து, சிறந்த தமிழறிஞராக இருந்த காலஞ்சென்ற கலைஞர் மு. கருணாநிதி தமது புதல்வர் ஸ்டாலினுக்கு நல்ல தமிழ் பெயரைச் சூட்டாது, ஸ்டாலின் என்ற ரஷ்ய பெயரைச் சூட்டியமை ஒரு வியப்புக்குரிய கேள்வியா கவே இருக்கின்றது.

தமிழறிஞராக மட்டுமல்ல. சிறந்த அரசியலாளராகவுமிருந்த கலைஞர் மு. கருணாநிதி, ரஷ்ய நிலப்பிரபுத்துவ ஆட்சியாளர்களுக்கெதிரான ரஷ்ய புரட்சியினாலும் கவர்ந்திழுக்கப்பட்டவராக காணப்பட்டார். ரஷ்யப் புரட்சியின் ஆணிவேராக விளங்கிய விளாடிமிர் லெனினின் இடதுகரமாக ரஷ்ய புரட்சியின்போது விளங்கியவரே ஜோசப் ஸ்டாலின் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜோசப் ஸ்டாலின்**

1953ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி, ரஷ்ய புரட்சியின் முக்கிய தூணாக இருந்த ஜோசப் ஸ்டாலின் காலமானார். அதே ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி பிறந்த தமது புதல்வனுக்கு ரஷ்ய புரட்சியாளர் ஸ்டாலின்மீது கொண்ட அபிமானம் காரணமாக அவரது பெயரையே கலைஞர் கருணாநிதி சூட்டியிருந்தார் என்றே குறிப்பிடப்படுகின்றது. இந்திய அறிஞர்கள், புகழ்பூத்த அரசியல்வாதிகள் ஆகியோர் எப்போதுமே ரஷ்ய இலக்கிய வடிவங்களை விரும்புவோராகவே இருக்கின்றனர்.

மகாத்மா காந்தி புகழ்பெற்ற ரஷ்ய இலக்கியவாதியான லியோ டால்ஸ்டாய் மீது பெரு விருப்புக்கொண்டிருந்தார். இதன் காரணமாக, டால்ஸ்டாயுடன் கடிதத் தொடர்புகளை வைத்திருந்ததோடு, தென்னாபிரிக்காவில் தாம் வாழ்ந்த காலத்தில் பேணி வந்திருந்த பண்ணையொன்றுக்கு டால்ஸ்டாய் பண்ணை எனவும் பெயரிட்டிருந்தார்.

**மாக்ஸிம் கோர்க்கியின் தாய் நாவல்**

இதேவேளை கலைஞர் கருணாநிதி, ரஷ்ய இலக்கிய வடிவங்களில் அவருக்கிருந்த அபிமானத்தில், ரஷ்ய புரட்சியின் முக்கியத்துவத்தை விபரிக்கும் ரஷ்ய நாவலாசிரியரான மாக்ஸிம் கோர்க்கி எழுதிய உலகப் பிரசித்திபெற்ற தாய் என்ற நாவலை தமிழில், கவிதை வடிவில் மொழிபெயர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, கலைஞர் கருணாநிதி ரஷ்ய புரட்சிமீது கொண்டிருந்த பேரபிமானமே இன்று தமது 68 வயதில் தமிழக முதல்வராகியிருக்கும் அவரது புதல்வருக்கு ஸ்டாலின் என்ற பெயரையும் வைக்கத் தூண்டியிருந்தது.

1952ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத்தின் 25ஆவது முதலமைச்சராக பொறுப்பேற்கின்றார் மு. க. ஸ்டாலின்.

**மூதறிஞர் ராஜாஜி**


தமிழக மாநிலத்தின் முதலாவது முதலமைச்சராக இருந்தவர் மூதறிஞர் ராஜாஜி என்றழைக்கப்பட்ட ராஜகோபாலாச்சாரியார் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜாஜி முதலாவது இந்திய மகாதேசாதிபதி என்பதுவும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயரான மவுன்ட்பேட்டன் பிரபுவையடுத்து, சுதந்திர இந்தியாவின் முதலாவது இந்திய மகாதேசாதிபதி என்ற பெருமைக்குரியவராக இருந்தவர் ராஜாஜி. தமிழக மாநில உருவாக்கத்தின் பின்னர், காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு முதலாவது தமிழக முதலமைச்சராகவும் ராஜாஜி தெரிவானார்.

இத்தடவை தமிழக மாநில தேர்தல் பல்வேறு வடிவிலும் முக்கியத்துவம் மிக்கதாகவே காணப்படுகின்றது. தமிழக முதலமைச்சராக பதவியேற்கவுள்ள ஸ்டாலின், தமிழகத்தின் முக்கிய கட்சியான தி.மு.க.வின் ஒரு புதிய சந்ததி தலைவராக தற்போது தெரிவாகியுள்ளார். ஸ்டாலின் அவரது தந்தையாரோடு சேர்ந்து அரசியலில் கடந்துவந்த பாதை ஏற்ற, இறக்கம் கொண்டதாகவே காணப்பட்டது. இருந்தபோதிலும், மனந்தளராதவராக தமது அரசியல் பயணத்தை ஸ்டாலின் தெளிவாகவும் மன உறுதியோடும் மேற்கொண்டிருந்தார். எனவே, ஸ்டாலினின் மன உறுதிக்கும், தெளிவான அரசியல் சிந்தனைக்கும் கிடைத்த வெற்றியே, இத்தடவை தமிழக தேர்தல் முடிவுகளாகும்.

இலங்கைத் தமிழர் விவகாரம் இத்தடவை தமிழக மாநில தேர்தலில் கடந்த காலங்களில்போன்று பெரியளவில் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. இதன்மூலம், தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் விவகாரம் அதன் முக்கியத்துவத்தை இழந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், வடக்கு - கிழக்கு தமிழ் அரசியலாளர்களே தமது அரசியல்போக்கு குறித்து ஒரு தெளிவற்ற நிலையிலிருக்கும்போது, தமது பங்களிப்பு பயனற்றதொன்றாகவே இருக்கும் என்ற நிலைப்பாட்டை தமிழக அரசியல்வாதிகள் கொண்டுள்ளதையே இத்தடவை தேர்தல் வெளிப்படுத்தியிருப்பதோடு, இலங்கைத் தமிழர் பிரச்னையையே முன்னிறுத்தி தேர்தல் களத்திலிறங்கிய நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமானின் படுதோல்வியும்கூட இதனை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இந்நிலையில், மு. க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக மாநில ஆட்சிமீது தமிழக மக்கள் தமது நம்பிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், அவரது ஆட்சி எவ்வாறு இருக்குமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மே - 4 செவ்வாய்க்கிழமை**
பிலவ வருடம் - சித்திரை - 21
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : அஷ்டமி

## இன்றைய ராசிபலன்

**04.05.2021**

**மேடம்**
இனிமையான பேச்சினால் கவர்வீர்கள். இளைஞர்கள் வெற்றியடைவர். புத்திசாலித்தனமான செயல் ஒன்றால் பாராட்டுப் பெறுவீர்கள். பெரியோர்களுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுப்பீர்கள்.

**இடபம்**
கவரும் தன்மை அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். தொலைதூரத்தில் உள்ளவர்கள் தொடர்பினால் நன்மை உண்டு. அலைச்சல் அதிகரிக்கும். பணியில் வேகம் கூடும்.

**மிதுனம்**
வார்த்தையை கவனமாக பயன்படுத்தினால் பிரச்னை இல்லை. சோர்வு குறையும். மனதாலும் யாருக்கும் தீமை நினைக்க வேண்டாம். கடந்த சில நாட்களாக மனதில் இருந்த கவலை ஒன்று நீங்கும்.

**கடகம்**
நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்வதால் மன நிறைவு ஏற்படும். வெளியிடத்தில் உணவு உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். அலுவலக வழக்குகளில் சாதகமான திருப்பம் இன்று ஏற்படும்.

**சிம்மம்**
மகிழ்ச்சியான நிகழ்வுகளால் திக்குமுக்காடுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். பணியிடத்தில் இருந்த நிலுவைத் தொகைகள் திடீரென்று வரும். பணம் புரண்டு சந்தோஷம் தரும். மற்றவர்களுக்கு உதவுவீர்கள்.

**கன்னி**
பயம் நீங்கும். பிள்ளைகள் நிதானமாகத்தான் முன்னேறுவர். ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்ளுங்கள். பயணம் தள்ளிப்போகும். பிரச்னைகளை தவிர்க்கும் வழிமுறைகளைக் காண்பீர்கள்.

**துலாம்**
பிள்ளைகள் பரிசுகள் பெற்றுப் பெருமிதம் கொள்ளச் செய்வர். உடல் நலத்தில் ஒரு சில தொந்தரவுகள் ஏற்பட்டு பின் சீராகும். பழைய நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்**
நண்பர்கள் உயர் நிலை அடைய உதவுவீர்கள். பயணத்தைத் தவிர்க்கவும். மதியத்திற்கு மேல் சிறப்பான பலன்களை பெற்று மகிழ்வீர்கள். முக்கிய விஷயங்களில் இருந்த தேக்க நிலை அடியோடு மாறும்.

**தனுசு**
குடும்பத்தினரின் செயல்களில் கொஞ்சம் பிடிவாதம் இருக்கும். புதிய முயற்சிகளில் உடனடியாக பலன் எதிர்பார்க்க வேண்டாம். உடன் பிறப்புகளுக்கு உங்களால் நன்மைகள் ஏற்படலாம்.

**மகரம்**
பயணங்களின் போது பொருட்களை கவனமாகப் பாதுகாக்கவும். ஆரோக்கியத்தில் உஷ்ணம் தொடர்பான பிரச்னைகள் ஏற்படும். தம்பதி இடையே ஒற்றுமை கூடும். எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது.

**கும்பம்**
கடன்களை அடைப்பதற்கு உண்டான வழி கிடைக்கும். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். பிள்ளைகள் உதவுவார்கள். பண வரவு தாராளமாக இருக்கும். தந்தைக்கு நன்மை உண்டு.

**மீனம்**
உறவினர்கள், நண்பர்கள் வகையில் அனுகூலம் ஏற்படும். இன்று தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.

# மே 7 ஆம் திகதி முதல்வராக பதவி ஏற்கின்றார் ஸ்டாலின்

## இன்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம்

சென்னை, மே. 04

தமிழகத்தில் அறுதிப்பெரும்பான்மை பெற்ற திமுகவின் தலைவர் ஸ்டாலின் வரும் 7 ஆம் திகதி ஆளுநர் மாளிகையில் எளிய முறையில் பதவி ஏற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவை தேர்தலில்தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெற்றது. திமுக தனித்து 125 இடங்களையும் உதய சூரியன் சின்னத்தில் 8 பேரில் வெற்றிப் பெற்ற நிலையில் 133 இடங்களை பெற்றுள்ளது. தி.மு.க. கூட்டணி 159 இடங்களை பெற்றுள்ளது. கூட்டணியில்காங்கிரஸ்கட்சி 18 இடங்களையும், இடதுசாரி கட்சிகள் தலா 2 இடங்களையும், ம.தி.மு, வி.சி.க. தலா 4 இடங்களையும், மற்ற கூட்டணிக்கட்சிகள் 4 இடங்களையும் பெற்றுள்ளது.

அறுதிப்பெரும்பான்மை பெற்றதால் தி.மு.க தலைவர் ஸ்டாலின் மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட முதல்வராக பதவி ஏற்க உள்ளார். தேர்தல் வெற்றிக்குப் பின்நேரு உள்அரங்கில்பிரம்மாண்ட பதவி ஏற்பு விழா நடத்த உத்தேசித்திருந்த நிலையில் கொரோனா இரண்டாம் அலை பரவல் காரணமாக ஆளுநர் மாளிகையில் எளிய முறையில் ஸ்டாலின் முதல்வராக பதவி ஏற்க உள்ளார்.

அங்கு அவருக்கும் இன்ன பிற அமைச்சர்களுக்கும் ஆளுநர் பதவி பிரமாணம் செய்து வைப்பார். அதற்கு முன் இன்று தேர்வு செய்யப்பட்ட தி.மு.க சட்டப்பேரவை உறுப்பினர்கள், உதய சூரியன் சின்னத்தில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் முறைப்படி முதல்வராக ஸ்டாலினை தேர்வு செய்யும். அதன் பின் தான் முதல்வராக தேர்வு செய்யப்பட்டதற்கான கடிதத்தை ஆளுநரை சந்தித்து பதவி ஏற்புக்கு அழைப்பு விடுக்க கோருவார்.

இதன்படி மே 7 அன்று முறைப்படி முதல்வராக ஸ்டாலின் பதவி ஏற்க உள்ளார். இதன் மூலம் தி.மு.கவின் மூன்றாவது முதல்வராக ஸ்டாலின் பதவி ஏற்கிறார். கருணாநிதி, ஜெயலலிதா மறைவுக்குப்பின் ஸ்டாலின் நேரடியாக தேர்வு செய்யப்படும் முதல்வராகிறார்.

# ஆளுநர் மாளிகையிலேயே எளிமையான பதவியேற்பு

சென்னை, மே. 04

தமிழகத்தில் புதிய அரசு பதவிப்பிரமாண நிகழ்ச்சியை ஆடம்பர விழாவாக நடத்தாமல் ஆளுநர் மாளிகையிலேயே அதை நடத்துவது என்று நாங்கள் முடிவு செய்திருப்பதாக ஸ்டாலின் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைத் பொதுத்தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழகத்து மக்கள் வழங்கியிருக்கும் இந்த மகத்தான வெற்றிக்கு வழிவகுத்து தந்திருக்கும் அனைவருக்கும் திமுக சார்பில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை - வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பத்தாண்டு காலமாக தமிழகம் ஒரு பாதாளத்திற்குப் போயிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிந்து - புரிந்து, அதனைச் சரிசெய்ய தி.மு.க. தலைமையில் அமைந்திருக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்கிற உணர்வோடு - ஆட்சிக்கு வர வேண்டும் என்கிற எண்ணத்தோடு மிகப் பெரிய ஆதரவை - மிகப்பெரிய வெற்றியை எங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

எந்த எதிர்பார்ப்போடு அந்த வெற்றியைத் தந்து இருக்கிறார்களோ - எந்த நம்பிக்கையோடு எங்களிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறார்களோ, அந்த நம்பிக்கைக்கு ஏற்ற வகையில், அந்தப் பொறுப்பை உணர்ந்து எங்களுடைய ஆட்சி நிச்சயம் அதனை நிறைவேற்றித் தரும்.

எங்களையெல்லாம் ஆளாக்கிய கருணாநிதி ஐந்து முறை தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் முதல்வராக இருந்து தமிழகத்து மக்களுக்கு ஆற்றியிருக்கக்கூடிய பணிகள் ஆகியவற்றையெல்லாம் நாங்கள் உணர்ந்து அவர் வழி நின்று ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படிப் பயிற்றுவித்து இருக்கிறார்களோ, அந்த வழிநின்று எங்கள் கடமையை நிச்சயம் ஆற்றுவோம்.

அவர் இருந்த காலத்திலேயே தி.மு.க. ஆறாவது முறையாக ஆட்சிக்கு வரவேண்டும் என்று நாங்களெல்லாம் எண்ணியிருந்தோம். ஆனால் அது நிறைவேறாமல் போய்விட்டது என்பது எங்களுக்கு ஏக்கமாகவே இருந்து வந்தது. ஆனால், அந்த ஏக்கம் இன்றைக்கு ஓரளவுக்கு போயிருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று அண்ணா சொல்வார்கள். ஆகவே மக்கள் அளித்திருக்கும் இந்தத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டு, எங்களுக்கு வாக்களித்தவர்கள் 'இவர்களுக்கு நாம் வாக்களித்தது நன்மைதான் மகிழ்ச்சிதான்' என்று உணரக் கூடிய வகையிலும், வாக்களிக்காத அவர்கள் 'இவர்களுக்கு நாம் வாக்களிக்காமல் போய் விட்டோமே' என்று எண்ணக்கூடிய அளவுக்கு நிச்சயமாக எங்களுடைய பணி அமையும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன பணிகளெல்லாம் ஆற்றுவோம் என்று வாக்குறுதிகளாகத் தந்திருக்கிறோம். அவற்றையெல்லாம் படிப்படியாக நாங்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து நிறைவேற்றுவதற்கான முயற்சியில் எங்களை ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றுவோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, எப்படி ஐந்தாண்டு காலத்துக்கு தேர்தல் அறிக்கை தந்திருக்கிறோமோ, அதைப்போல் பத்தாண்டு காலத்தை அடிப்படையாக வைத்து தொலைநோக்கு பார்வையோடு ஏழு அறிவிப்புகளை நான் ஏற்கனவே அறிவித்து இருக்கிறேன். அவற்றையும் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபடுவோம் - தொடர்ந்து பணியாற்றுவோம்.

அண்ணா வழி நின்று கருணாநிதி பயிற்றுவித்திருக்கக்கூடிய வழிநின்று எங்கள் கடமையை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று நான் உறுதி எடுத்துக் கொள்கிறேன்-என்றார்.

# பழனிசாமி ராஜினாமா

சென்னை, மே. 04

தமிழக முதல்வராக தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பொறுப்பேற்க உள்ள நிலையில், தனது முதல்வர் பதவியை பழனிசாமி ராஜினாமா செய்தார். சேலத்தில் இருந்தும் கடிதம் மூலமாக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு அனுப்பியுள்ளார்.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க கூட்டணி 159 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க உள்ளது. அ.தி.மு.க கூட்டணி 75 இடங்களில் வெற்றிப்பெற்று ஆட்சியை பறிகொடுத்தது.

இதனையடுத்து தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வரும் 7ஆம் தேதி ஆளுநர் மாளிகையில் எளிய முறையில் பதவி ஏற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எடப்பாடி தொகுதியில் போட்டியிட்டு வென்ற முதல்வர் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க கூட்டணி தோல்வி அடைந்ததால், தனது முதல்வர் பதவியை பழனிசாமி ராஜினாமா செய்தார். தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு சேலத்தில் இருந்து அனுப்பியுள்ளார்.

# தமிழக சட்டசபையில் இம்முறை அதிக கட்சிகள்

சென்னை, மே. 04

தமிழக சட்டசபைக்கு இம்முறை அதிக கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் செல்லவுள்ளனர்.

தமிழக சட்டசபையில்கடந்த முறை எதிர்க்கட்சி வரிசையில் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்.எல்.ஏ.க்கள் இடம் பெற்றனர். ஆளும் கட்சி வரிசையில் அ.தி.மு.க. இடம் பெற்றது. அக்கட்சி சின்னத்தில் வெற்றி பெற்ற சிறிய கட்சி எம்.எல்.ஏ.க்கள் மூவர் இருந்தனர்.

தி.மு.க. தனிப்பெரும்பான்மை பெற்று உள்ளது. அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தை கட்சி எம்.எல்.ஏ.க்கள் சட்டசபைக்கு செல்கின்றனர். மேலும் தி.மு.க. சின்னத்தில் போட்டியிட்ட ம.தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி எம்.எல்.ஏ.க்களும் சட்டசபைக்கு செல்கின்றனர். எதிர்க்கட்சி வரிசையில் அ.தி.மு.க. மற்றும்அதன்கூட்டணி கட்சிகளான பா.ம.க. - பா.ஜ.க - எம்.எல்.ஏ.க்கள் இடம் பெற உள்ளனர். அ.தி.மு.க. சின்னத்தில் போட்டியிட்ட புரட்சி பாரதம் கட்சி தலைவர் ஜெகன்மூர்த்தியும் வெற்றி பெற்று சட்டசபைக்கு செல்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர் தீர்வுக்கு அழுத்தங்களை வழங்குங்கள்

## ஸ்டாலினிடம் கோருகிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 04

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக, மாபெரும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதற் குடிமகனாகவும் இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய நியாயபூர்வமான அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு மிக அவசியமான தேவையாக இருப்பது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அந்த அழுத்தங்கள் உறுதுணையாக அமையும் என தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன்.

தமிழக முதல்வராக மு.க. ஸ்டாலின் பதவியேற்கவுள்ள நிலையில், அவருக்கு அனுப்பிய வாழ்த்து செய்தியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்து செய்தியில்,

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, ஆறாவது தடவையாகவும், திராவிட முன்னேற்றக் கழகம் அதன் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைத்திட அறிவுபூர்வாக செயல்பட்டு அடித்தளமிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான தங்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மாணவனாக கோபாலபுரத்தில் சமூகப் பணிகளை ஆரம்பித்து, எண்பதாம் ஆண்டுகளில் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக செயற்பட்ட காலம் தொட்டு கழகத்தின் வளர்ச்சியில், தங்கள் அயராத உழைப்பின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மாபெரும் திராவிட இயக்கத்தினது மட்டுமல்லாது தமிழகத்தினதும் எதிர்காலத்தை பொறுப்பேற்கும் உன்னதமான கடமையினை காலம் இன்று தங்களுக்கு ஒப்படைத்திருப்பதை மகிழ்வுடன் காண்கின்றோம். அந்தக் கடமையில் தாங்கள் வெற்றி பெறவேண்டுமெனவும் வாழ்த்துகிறோம்.

தங்கள் தந்தையாரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் அவர்களுடன் எமது மறைந்த தலைவர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்) மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். அதனை நீங்களும் அறிவீர்கள். எங்களுடைய இயக்கத்துடன் தங்கள் தந்தை கொண்டிருந்த நெருக்கம் காரணமாக நானும் கலைஞரை பல தடவைகள் சந்தித்து தமிழ் மக்களுடைய பிரச்னைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி அவருடைய அறிவுரைகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்.

குறிப்பாக, இந்திய தரப்புகளின் அனுசரனையுடன் திம்பு பேச்சு உள்ளிட்ட பல பேச்சுகள் இலங்கை அரசுடன் நடைபெற்ற சந்தர்ப்பங்களில் அந்த சந்திப்புக்களுக்கு செல்வதற்கு முன்பதாக கலைஞரிடம் சென்று கலந்துரையாடிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலைஞருடன் கூடவே நீங்களும் ஈழத் தமிழர்களின் பிரச்னைகளை மிகுந்த அக்கறையுடனும் அனுதாபத்துடனும் அணுகியிருந்ததை நான் உணரத் தவறவில்லை. அந்த உணர்வுடனும் ஆதரவுடனுமே உங்கள் நிலைப்பாடு இன்றுவரை தொடர்கிறது என்பதை நம்புகின்றோம்.

தற்போதைய நெருக்கடியான நிலையிலே, இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்னைகள் தொடர்பாக, மாபெரும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதற் குடிமகனாகவும் இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய நியாயபூர்வமான அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு மிக அவசியமான தேவையாக இருப்பது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அவ் அழுத்தங்கள் உறுதுணையாக அமையுமெனவும் நம்புகின்றோம்-என தெரிவித்துள்ளார்.

# மாகாண சபைகளுக்கு தேர்தலை இவ்வருடம் நடத்துவது கடினம்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான் கூறுகிறார்



கொழும்பு, மே 04

**மாகாண சபை தேர்தல் முறைமை குறித்து இம்மாத காலத்திற்குள் உறுதியான தீர்வை எடுக்க எதிர்பார்த்துள்ளோம். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவது கடினமாகும்.**

**கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை எதிர்க் கொள்வது தற்போதைய சூழ்நிலையில் சவால்மிக்கதாக காணப்படுகிறது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**

மாகாண சபை தேர்தல் குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தல் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் அமைச்சரையில் சமர்ப்பித்துள்ள யோசனை குறித்து எவ்வித தீர்மானங்களும் இதுவரை எடுக்கப்படாத நிலை காணப்படுகிறது. யோசனையின் ஒரு சில உள்ளடக்கங்களுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.


மாகாண சபை தேர்தலை நடத்துவதில் பல்வேறுப்பட்ட சிக்கல் நிலை காணப்படுகிறது. மாகாண சபை தேர்தல் முறைமையை அவற்றில் பிரதான மானவையாக குறிப்பிட வேண்டும். தேர்தல் முறைமை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் யோசனைகளும் கோரப்பட்டன. அந்த யோசனைகள் ஒவ்வொன்றும் முரண்பட்டதாக காணப்படுகிறன. ஆகவே மாகாண சபைதேர்தல் முறைமை தொடர்பில் இம் மாத காலத்திற்குள் ஒரு உறுதியான தீர்வை எடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

மாகாண சபை தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவதற்கான சாத்தியம் அரிதாகவே காணப்படுகிறது. கடந்த காலங்களை காட்டிலும் கொவிட்-19 வைரஸ் தாக்கம் தற்போது சடுதியாக அதிகரித்துள்ளது. இச்சவாலை எதிர்க் கொள்ள அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

சுகாதார தரப்பினரது அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் பின்பற்ற வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு அரசியல் இலாபம் தேடுவதை எதிர் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எதிர்த்தரப்பின் ஒரு சில செயல்பாடுகள் வெறுக்கத்தக்கதாக உள்ளது-என்றார்.

# இலங்கைக்கு வருகை தரவுள்ள சீன வெளிவிவகார அமைச்சர்!



கொழும்பு, மே 04

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்த மாதம் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது அண்மைய மாதங்களில் சீனாவிலிருந்து மூன்றாவது முக்கியஸ்தர் ஒருவரின் உத்தியோகபூர்வ நிலை பயணமாக அமையவுள்ளது.

ஏற்கனவே, சீன பாதுகாப்பு அமைச்சர் பெங்கெற் கடந்த வாரம் நாட்டுக்கு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் இணக்கம் வெளியிட்டிருந்தன.

இந்தநிலையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் தனது பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வரவுள்ளார் என்பதோடு, இது இலங்கைக்கான அவரின் இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயமென்பது குறிப்பிடத் தக்கது.

# சிங்கப்பூரிலிருந்து ஒட்சிசன் சிலிண்டர்கள் இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, மே 04

வைத்தியசாலைகளில் ஒட்சிசன் சிலின்டர் பற்றாக்குறை கிடையாது. தற்போதைய தேவைக்கு போதுமான அளவு ஒட்சிசன் சிலிண்டர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. தேவையாயின் சிங்கப்பூர் நாட்டில் இருந்து ஒட்சிசன் சிலிண்டர்களை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என மின்சாரத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட்-19 வைரஸ் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் வைத்தியசாலைகளில் ஒட்சிசன் சிலின்டர் பற்றாக்குறை காணப்படுவதாக சமூக வலைத்தளங்களில் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு போலியான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டில் இரண்டு பிரதான நிறுவனங்கள் மருத்துவ துறைக்கு தேவையான ஒட்சிசன் சிலிண்டர்களை உற்பத்தி செய்கின்றன. தற்போதைய நிலையினை கருத்திற் கொண்டு ஜனாதிபதி இவ்விரண்டு நிறுவனங்களிடமும் உற்பத்தி தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கையை கோரினார்.

இவ்விரு நிறுவனங்களும் மருத்துவத்துறைக்கு ஒரு நாளைக்கு தேவையான 22 ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் சிலிண்டர்களை உற்பத்தி செய்கின்றன. தற்போது அந்த உற்பத்தி 67 ஆயிரம் லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு தழுவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் 15 ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் சிலின்டர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே மருத்துவ துறையில் ஒட்சிசன் சிலிண்டர் பற்றாக்குறை ஏற்படவில்லை.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. தேவையாயின் சிங்கப்பூர் நாட்டில் இருந்து ஒட்சிசன் சிலிண்டர்களை தேவையான அளவு மேலதிகமான இறக்குமதி செய்யுமாறு ஜனாதிபதி உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவசர சிகிச்சை பிரிவு கட்டில்கள் தொடர்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

இந்தியாவில் மக்கள் அவசர சிகிச்சை கட்டில்கள் இல்லாத காரணத்தினால் உயிரிழக்கவில்லை. ஒட்சிசன் சிலிண்டர் பற்றாக்குறை ஏற்பட்டதால் அங்கு மரணங்கள் பெருமளவில் தற்போது பதிவாகியுள்ளன.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் ஏற்பட்டடுள்ள நெருக்கடி நிலையை வெற்றிக் கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இப்பிரச்சினையை நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தேசிய பிரச்சினையாக கருத வேண்டும். சுகாதார தரப்பினரது அறிவுறுத்தல்களை அனைவரும் முழுமையாக பின்பற்றுவது அத்தியாவசிய கடமையாகவே கருதப்படும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியர்கள் ஊடுருவலை தடுக்க கரையோர பாதுகாப்பு அதிகரிப்பு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு,மே.04

**இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கைக்குள் ஊடுருவதைத் தடுக்க, கரையோரப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், அங்கிருந்து மக்கள் இலங்கைக்குள் ஊடுருவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தென் இந்தியாவில் இருந்து இந்தியர்கள் இலங்கைக்குள் கடல்வழியாக ஊடுருவியுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், கடற்படையினர் கரையோரப் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாக இராணுவத் தளபதி நேற்று ஊடகங்களிடம் கூறினார்.

# கொரோனாவுக்கு சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

## படுக்கைகளுக்குப் பற்றாக்குறை

கொழும்பு, மே. 04

வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 13ஆயிரத்தைக் கடந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் முதலாம் திகதி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 731 ஆக பதிவாகியிருந்தது.

எனினும், ஏப்ரல் மாதத்தின் ஆரம்பம் முதல் மே மாதத்தின் ஆரம்பம் வரையான குறுகிய காலப்பகுதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 824 ஆகக் காணப்படுகிறது.

தற்போதைய நிலையில் வைத்தியசாலைகள் கொரோனா தொற்றாளர்களால் நிரம்பியுள்ளதால் விடுதிகளுக்கு அல்லது படுக்கைகளுக்குத்தட்டுப்பாடு ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரியநேரத்தில் அரசாங்கம் நாட்டை முடக்கவேண்டும்

## விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே. 04

கொரோனா வைரஸ் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதை விட நோய் பரவுவதைத் தடுப்பதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நோய் பரவுவதைத் தடுப்பதற்கு ஏதேனும் ஒரு முறையில் நாட்டை முடக்கவேண்டிய தேவை ஏற்பட்டால், அந்தத் தீர்மானத்தை உரிய நேரத்தில் எடுக்க வேண்டும் எனவும் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை அதிகாரிகளால் சரியான தகவல்களை அரசியல்வாதிகளுக்கு அல்லது தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு வழங்குவதன் மூலமே இந்தத் தீர்மானத்தை எடுக்க முடியும் எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இந்திய - இலங்கை தமிழ் பேசும் மக்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளி!

## ஸ்டாலினின் வெற்றி குறித்து ஹக்கீம் கருத்து

கொழும்பு, மே. 04

தமிழகத்தில் தி.மு.க. வெற்றி குறித்து மு.கா.தலைவர் ஹக்கீம் பெருமிதம்.தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.கூட்டணி தமிழக சட்ட மன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிருப்பது அளப்பரிய மகிழ்ச்சியை அளிப்பதாகவும், இந்த மகோன்னத வெற்றியின் ஊடாக இந்திய - இலங்கை தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளிக்கீற்று பளிச்சிடுவதாகவும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பத்தாண்டு கால இடை வெளியின் பின்னர் ஆறாவது முறையாகவும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டுக் கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு ஏற்கவிருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

பிரத்தியேகமாக தளபதி மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக் கடிதமொன்றை எழுதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அதற்கு முன்னதாகவே வெளியிட்டுள்ள அறிக்கையில் சில விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அவையாவன:

மறைந்த கலைஞர் மு.கருணாநிதியின் அரசியல் வாரிசான மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது சகோதரி கனிமொழி உட்பட திமுக வினரும்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முதலான அதன் ஏனைய கூட்டுக் கட்சியினரும் எங்களுடன் சிறந்த நட்புறவைப் பேணிவருகின்றனர்.

234 ஆசனங்களைக் கொண்ட தமிழக சட்ட சபையில், அவற்றில் ஆகக் கூடுதலானவற்றை கைப்பற்றும் திறன் திமுக கூட்டணிக்கு வாய்த்திருக்கின்றது. தந்தையைப் போலவே முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது சேப்பாக்கம் தொகுதியில் மிக அதிகப் படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றியைத் தழுவியிருப்பதுவும் மகிழ்ச்சிக்குரியது.

தி.மு.க.வின் கூட்டுக் கட்சிகளில் ஒன்றான மனித நேய மக்கள் கட்சியில் இனிய நண்பர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாஹ் தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தொகுதியிலும், அதே கட்சியில் பா.அப்துல் சமது திருச்சி மாவட்டம் மணற்பாறைத் தொகுதியிலும், தி.மு.க.கூட்டணியில் இடம்பெற்றுள்ள மற்றொரு கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் நாகப்பட்டிணத்தில் இளம் அன்புத் தோழர் ஆளுர் ஷாநவாஸ் ஆகியோரும் வெற்றிவாகை சூடியிருப்பதும் எங்களது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றது.

தளபதி ஸ்டாலின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் மத்திய அரசாங்கத்துடனும் எமது தாய்த்திருநாடான இலங்கை முதலான அயல் நாடுகளுடனும் நல்லுறவைப் பேணி பரவலாகப் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த இறைவன் அருள் புரிய வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

-இவ்வாறு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# பிரதமரை இன்று மீண்டும் சந்திக்கும் ஆளுந்தரப்பின் பங்காளிக் கட்சிகள்

கொழும்பு,மே 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இன்று செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ள அனைத்துப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையில் இடம்பெறும் அரசியல் கட்சிக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் முறைமை, ஆளும் கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பிரதான 10 பங்காளிக் கட்சித் தலைவர்களான உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் திஸ்ஸ விதாரண உள்ளிட்ட பிரதான தரப்பினர் பிரதமருடன் தனிப்பட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்கள்.

அரசியல் கட்சிக் கூட்டத்தில் அரசாங்கத்தின் தலைவர் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், கட்சியின் செயலாளர்கள் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அரசியல் உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள்.

ஆனால் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற பிரதமர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கட்சித் தலைவர் கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் மாவட்ட உறுப்பினர்கள் உட்பட பல புதிய முகங்கள் பங்குபற்றியிருந்தன.

இதன் காரணமாக அன்று இடம்பெற்ற அரசியல் கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனை தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை இவ்வாறான நிலையிலேயே இன்று மீண்டும் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

# நாம் அதிகாரத்தில் இருக்கும்போது ஊடக சுதந்திரத்தை பாதுகாத்தோம்

## மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம்



கொழும்பு, மே. 04

நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும்பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தையொட்டி இன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது:

சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்றைய தினத்தில் (நேற்று) மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்வதற்காக இரவு பகலாக அயராது உழைக்கும் அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தகவல் தொடர்பு தற்போது உலகில் மிக வேகமாக முன்னேறி வரும் துறைகளில் ஒன்றாக மாறியுள்ளது. கடந்த சில தசாப்தங்களில் பல்வேறு ஊடகங்களின் ஊடாக தகவல்கள் பொதுமக்களை சென்றடையும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டது.

எனினும், சுயாதீனமான மற்றும் பொறுப்பான ஊடக பாவனையே காலத்தின் தேவையாகும். முறையான ஊடக பயன்பாட்டின் மூலமே மக்களின் தகவல் அறியும் உரிமை பாதுகாக்கப்படுகிறது. அதற்காக பணியாற்றுவது அனைவரதும் பொறுப்பும், கடமையுமாகும் என நான் நம்புகின்றேன்.

இந்நாட்டின் ஊடக சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விசித்திரமான காலங்களை நாம் நினைவுபடுத்தத் தேவையில்லை. நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

முழு உலகமும் தொற்று நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள இச்சூழ்நிலையில் 'தகவல்கள் பொதுமக்களின் நலனுக்கானது' எனும் தொனிப்பொருளில் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை கொண்டாடுவது காலத்திற்கு உகந்ததாகும்.

நாடு என்ற ரீதியில் இந்த தொற்றுநோயை எதிர்கொண்டு, அதனை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் பொதுமக்களை தெளிவுபடுத்தி, உயிராபத்தையும் பொருட்படுத்தாது ஊடகவியலாளர்கள் நிறைவேற்றும் இந்த உன்னத செயற்பாட்டையும், அர்ப்பணிப்பையும் அரசாங்கம் எப்போதும் பாராட்டும்.

அறிவை ஆயுதமாகக்கொண்ட ஊடகவியலாளர்களின் தொழில் வளர்ச்சிக்காக கல்வி புலமைப்பரிசில்கள் மற்றும் ஊடக உபகரணங்களை வழங்குவதற்கான எமது நடவடிக்கை எதிர்காலத்திலும் செயற்படுத்தப்படும்.

துல்லியமான செய்திகளை அறிந்துக் கொள்வதற்கான மக்களின் உரிமையை பாதுகாத்து, நாட்டின் ஒட்டுமொத்த சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கு ஊடக சுதந்திரத்தை பயன்படுத்துமாறு அனைத்து ஊடகவியலாளர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன்-என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செம்மலையில் பாதுகாப்பற்ற கிணற்றின் சகதிக்குள் மாட்டிய இரண்டு யானைகள்!

முல்லைத்தீவு, மே 04
முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட செம்மலைக் கிராமத்தில் யானைகள் இரண்டு கிணறு ஒன்றுக்குள் வீழ்ந்துள்ள நிலையில் வெளியில் வரமுடியாது தவிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

செம்மலையின் புளிய முனைப் பகுதியில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் கிணறு (துரவு) ஒன்றிலேயே இந்த யானைகள் விழுந்து சகதிக்குள் சிக்கியுள்ளன.

சம்பவம் தொடர்பில் வன ஜீவராஜிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

# வவுனியா மாவட்ட உணவகங்களில் விசேட மேற்பார்வை நடவடிக்கை

வவுனியா, மே 04
வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் விசேட மேற்பார்வை நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொவிட்-19 தொற்று பரவலடைந்து வரும் நிலையில் நகரில்அமைந்துள்ள உணவகங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள துடன், சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வவுனியா உணவகங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக சுகாதார பரிசோதகர்களால் நேற்று மேற்பார்வை செய்யப்பட்டது.

இதன்போது ஒவ்வொருவருக்கும் இடையில் சமூக இடைவெளிகள் இறுக்கமாக பேணப்படவேண்டும் என்று உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நிபந்தனைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

# உலக தமிழ் மக்களுக்கும் தலைவராக மு.க.ஸ்டாலின் செயல்படவேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை



கொழும்பு, மே 04
**தமிழக சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், முதலமைச்சராகப் பதவியேற்கும் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலத்த போட்டிகளுக்கு மத்தியில் மாபெரும் வெற்றியீட்டி இருப்பது, தமிழக மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் அபிமானத்தையும், எதிர்பார்ப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்கும் தாங்கள் தமிழக மக்களுக்கு மாத்திரமல்லாமல், உலகம் முழுதும் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் தலைவராகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

ஈழத் தமிழர்களாகிய நாங்கள் உங்கள் வெற்றியை எமக்கான பலமாகவே கருதுகிறோம். முதலமைச்சராக உங்கள் மகத்தான பணி வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறோம்-என்றார்.

# போதைப்பொருள் குற்றச்சாட்டு 20 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு,மே 04
போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்தனர் என சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்ட 20 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி. ராகல நேற்று உத்தரவிட்டார். (எ)

# கொரோனாவுக்குள் அரசியல் வேண்டாம்!

## அனைவரும் ஒத்துழைக்க கோருகிறார் மஹிந்த

கொழும்பு, மே 04
"நாட்டின் தேசிய அனர்த்தம் எனக் கருதி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அபாயகரமான இந்தச் சூழ்நிலையில் அரசியல் இலாபம் பெறும் வகையில் சிலர் செயல்படுவது பொருத்தமற்றது."

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் சரியான முறையில் சுகாதார வழிக்காட்டல்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிலர் அரசியல் பேதங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளைப் போட்டுக் கொள்ளும் வகையில் செயற்படுகின்றனரே அன்றி கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்பது அவர்களின் உண்மையான நோக்கமல்ல என்பது தெளிவாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சிலர் விமர்சித்து வருகின்றனர்.

இந்த விமர்சனங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாடு மற்றும் மக்களுக்காகக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுத்தால் அது எவருக்கும் முன்னுதாரணமாக அமையும்.

நாட்டில் இப்படியான பிரச்னை ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலையில் அரசியல் இலாபம் பெறும் வகையில் சிலர் செயற்படுவது பொருத்தமற்றது.

இப்படியான ஆபத்தான சந்தர்ப்பத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் சேவை அனைவருக்கும் முன்னுதாரணம்.

அதேபோல் மக்களும் சுகாதார ஆலோசனைகளைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும். இது அரசியல் நோக்கங்களுக்காகச் செயல்படும் நேரமல்ல" - என்றார்.

# கலைஞர் ஆற்றிய பணிகளை ஸ்டாலினும் தொடரவேண்டும்

## ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு, மே 04
கலைஞர் ஆற்றிய பணியினை ஸ்டாலினும் தொடர வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கலைஞர் ஆற்றிய பணியினை ஸ்டாலினும் தொடர வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க, தலைவர் மு.க.ஸ்டாலின் வெற்றிபெற்றுள்ளமை தொடர்பாக அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலியே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தி.மு.க. ஆட்சியில் 10 ஆண்டுகளின் பின் மீண்டும் உதயசூரியன் உதித்தமை தமிழ் பேசும் நல்லுலகில் மக்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது. நீங்கள் அடைந்த வெற்றி தமிழர்களுக்கு பெரும் திருப்தியைத் தந்ததோடு, தங்கள் தந்தை இன்று இல்லாதது வருத்தத்திற்குரியதாகும்.

இச் சந்தர்ப்பத்தில் நீங்கள் இளைஞனாக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம் சரித்திர முக்கியத்துவம் பெற்றமையால் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏறக்குறைய 42 ஆண்டுகளுக்கும் மேல் தங்கள் தந்தையார் வகித்து வந்த இதே பதவியை நியாயமற்ற முறையில் அன்றைய அரசு கலைத்தபோது சீறியெழுந்த இலங்கை தமிழர் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழ் நாட்டிற்கு வந்து நீதி கேட்டு வாதாடி வென்ற வழக்கு நடைபெற்ற போது அன்று இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நான் அன்றைய வெற்றியில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆகவே, இன்று நீங்கள் ஈட்டியுள்ள வெற்றி எனக்குப் பல மடங்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இனப்பிரச்னை தீர்விற்கு தங்கள் தந்தையார்



கலைஞர் ஐயாவின் உதவியைப் பெறும்படி அன்றைய அரசை வேண்டியிருந்தேன்.

எமது நாட்டுப்பிரச்னை தீர உங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது மட்டுமல்ல அவசியமானது என்றும் ஞாபகமூட்டி, உங்கள் தந்தையார் ஆற்றிய பணியை எமது விடயத்திலும் நீங்கள் தொடர வேண்டும் என வேண்டி இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன்.

உங்கள் பணி நீண்ட காலம் தொடர வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன். எம் நாட்டிலும் விரைவில் சூரியன் உதிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்-என்றுள்ளது.

# மின் வேலியில் சிக்கி காட்டு யானை பலி!

கொழும்பு, மே 04
அநுராதபுரம்-தலாவ பிரதேச சபைக்கு உட்பட்ட கரக ஹவெவ கிராம சேவகர் பிரிவில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் மின்வேலியில் சிக்கி காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளது.

வீடொன்றுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியொன்றில் சிக்கியே குறித்த யானை உயிரிழந்ததாக தாக தலாவ வனவிலங்கு காரியாலயம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த வீட்டின் உரிமையாளர் தற்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த, யானை சுமார் 25 வயதுடையதென குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, 7.5 அடி உயரமும் அதன் தந்தங்கள் 8 அங்குலம் சுற்றளவும் கொண்டதெனவும் தலாவ வனவிலங்கு காரியாலய உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாவ வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.க.ஸ்டாலின் அரசியல்

## வெற்றிகள், தோல்விகள், சறுக்கல்கள், சாதனைகள்!

ரா. அரவிந்த்ராஜ்



ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். மீண்டும் 1996, 2001 மற்றும் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் அதே ஆயிரம் விளக்குத் தொகுதியில் போட்டியிட்டு தொடர்ச்சியாக மூன்று முறை வெற்றிபெற்றார். இப்போது கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு பெரும் வெற்றியைப் பெற்றுள்ள ஸ்ராலினின் அரசியல் வாழ்க்கை கடினமானதாகவே இருந் துள்ளது. பல தோல்விகள், சறுக்கல்களின் பின்னர் இப்போது பாரிய வெற்றியைப் பெற்று தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதிக்கும் தயாளு அம்மாளுக்கும் மார்ச் 1, 1953 ஆம் ஆண்டு மூன்றாவது மகனாக பிறந்தார் மு.க.ஸ்டாலின். ரஷ்ய அதிபர் ஸ்டாலின் நினைவாக இவருக்கு இந்தப் பெயரை சூட்டினார் கருணாநிதி. இவரின் மனைவி துர்கா. இவர்களுக்கு உதயநிதி என்ற மகனும், செந்தாமரை என்ற மகளும் இருக்கிறார்கள்.

இவர் சென்னை சேத்துப்பட்டியிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை நிறைவு செய்தார். பின் விவேகானந்தா கல்லூரியில் பி.யூ.சி படிப் பையும், மாநிலக் கல்லூரியில் கல்லூரிப் படிப்பையும் முடித்தார். தந்தையின் தாக்கத்தால், இளம் வயதிலேயே ஸ்டாலினுக்கு நாடகக்கலை மற்றும் அரசியலில் ஆர்வம் இருந்தது. இவர் நடித்த முதல் நாடகமான 'முரசே முழங்கு' வெற்றிவிழா கண்டது. அதைத் தொடர்ந்து 'திண்டுக்கல் தீர்ப்பு', 'நீதி தேவன் மயங்குகிறான்', 'நாளை நமதே' என திராவிடக் கொள்கைகளை விளக்கும் பல நாடகங்களிலும் நடித்துள்ளார். இதேபோல, திரைத்துறையிலும் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்திய ஸ்டாலின், 'ஒரே இரத்தம்', 'மக்கள் ஆணையிட்டால்' ஆகிய திரைப்படங்களிலும் 'குறிஞ்சி மலர்' என்ற நெடுந்தொடரிலும் நடித்துள்ளார்.

**அன்று முதலே அரசியலில்...**

ஸ்டாலின் தனது 14 ஆவது வயதிலேயே அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிவிட்டார். குறிப்பாக, தி.மு.க. முதன்முறையாக ஆட்சியைப் பிடித்த 1967 காலகட்டங்களில் பள்ளி மாணவனாக இருந்த ஸ்டாலின், தனது நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு 'கோபாலபுரம் இளைஞர் தி.மு.க' என்ற அமைப்பை ஏற்படுத்தி தலைவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடுவது, சமூகப்பணி செய்வது என மாணவப் பருவத்திலேயே அரசியல் செயல்பாடுகளில் இறங்கிவிட்டார்.

1968 ஆம் ஆண்டு நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.கவுக்காகப் பிரசாரம் செய்தார். அதைத் தொடர்ந்து, முதல் கட்சிப் பதவியாக சென்னை 75 ஆவது வட்ட தி.மு.கவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1973 ஆம் ஆண்டு தி.மு.கவின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1976 ஆம் ஆண்டு 'மிசா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார். 1980 ஆம் ஆண்டு தி.மு.கவின் இளைஞரணி தொடங்கப்பட்டு அதன் ஏழு அமைப்பாளர்களில் ஒருவராக ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டின் இறுதியில் தி.மு.கவின் மாநில இளைஞரணிச் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

2006 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பதவியேற்றார். 2008 ஆம் ஆண்டு தி.மு.கவின் பொருளாளராகப் பொறுப் பேற்றார். அதைத் தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல் துணை முதலமைச்சராக ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். 2016 சட்டமன்றத் தேர்தலில் 89 சட்டமன்ற உறுப்பினர்களுடன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

2017ஆம் ஆண்டு தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நலத்தைக் கருத்தில்கொண்டு தி.மு.க. பொதுக்குழுவின் மூலம் அக்கட்சியின் செயல் தலைவரானார். 2018 தி.மு.க. தலைவர் கருணநிதியின் மறைவுக்குப் பிறகு, தி.மு.க. தலைவராக ஸ்டாலின் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். தற்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக அறிவிக் கப்பட்டு, அக்கூட்டணிக்கு பாரிய வெற்றியை அவர் பெற்றுக்கொடுத்தார்.

**மேயராக-**

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மேயர் தேர்தலில் வெற்றிபெற்றார். பஞ்சாயத்து ராஜ் சட்ட திருத்தத்துக்குப் பிறகு நடைபெற்ற தேர்தல் என்பதால், 'முதன்முறையாக மக்களால் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர்' என்ற பெயரையும் ஸ்டாலின் பெற்றார்.

2001 ஆம் ஆண்டு மீண்டும் சென்னையின் மேயராக போட்டியிட்டு இரண்டாவது முறையாக வெற்றிபெற்றார். ஆனால், 2002 இல் ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. அரசு கொண்டுவந்த சட்டத்திருத்தமான, 'ஒரே நபர் இரு அரசுப் பதவிகளில் இருக்க முடியாது' என்ற காரணத்தால், அதே ஆண்டு, தான் வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர் பதவியை வைத்துக்கொண்டு மேயர் பதவியை ராஜிநாமா செய்தார் ஸ்டாலின்.

**சட்டமன்ற உறுப்பினராக-**

1984 ஆம் ஆண்டு நடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்டாலின், சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு தனது முதல் தேர்தலிலேயே தோல்வியடைந்தார். ஆனால், அதன் பிறகு 1989 இல் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் மீண்டும் சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு பெரு வாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1991 இல் நடைபெற்ற தேர்தலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். மீண்டும் 1996, 2001 மற்றும் 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் அதே ஆயிரம் விளக்குத் தொகுதியில் போட்டியிட்டு தொடர்ச்சியாக மூன்று முறை வெற்றிபெற்றார். 2006 இல் தி.மு.க. ஆட்சிக்கு வர உள்ளாட்சித்துறை அமைச்சர் பதவி ஸ்டாலினுக்குக் கிடைத்தது.

2011 மற்றும் 2016 சட்டமன்றத் தேர்தல்களில் மாறுதலாக கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட ஸ்டாலின் இரண்டுமுறையும் வெற்றிபெற்றார். தற்போதும் அதே தொகுதியில் போட்டியிடுகிறார்.

ஸ்டாலின் சென்னை மேயராக இருந்த போது அவர் கொண்டுவந்த நலத்திட்டங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. குறிப்பாகச் 'சிங்காரச் சென்னை' என்ற முழக்கத்தை முன்னெடுத்து, ஒன்பது மேம்பாலங்கள், 49 குறும் பாலங்கள், பூங்காக்கள், நீரூற்றுகள், மெரினா கடற்கரையை அழகுபடுத்தல், சாலை விரிவாக் கம் என அவர் செய்த அனைத்து விஷயங்களும் தமி ழக அரசியல் களத்தில் பேசுபொருளாக அமைந்தன.

ஆட்சி நிர்வாகம், சமூக மேம்பாடு பங்களிப்புக்காக அண்ணா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டத்தை அவருக்கு வழங்கியது. மேலும், அமெரிக்காவிலுள்ள கெண்டகி மாகாணத்தின் கொமன்வெல்த் 'கெண்டகி கேணல்' விருதை ஸ்டாலினின் பொதுச் சேவைக்காக வழங்கியது.

குடும்ப அரசியல், ஊழல், நில அபகரிப்பு புகார்கள் தொடர்ந்து ஸ்டாலின் துணை முதல்வராக இருக்கும்போது கையெழுத்திட்ட மீத்தேன் திட்ட அனுமதி உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் அவர் மீதான குற்றச்சாட்டுகளாக முன்வைக்கப்படுகின்றன. இவை அனைத்தையும் தாண்டி ஓர் ஆட்சிமாற்றத்துக்காக தமிழக மக்கள் இப்போது ஸ்ராலினை முதலமைச்சராக்கியிருக்கின்றார்கள்.



> "ஸ்டாலின் தனது 14ஆவது வயதி லேயே அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி விட்டார். குறிப்பாக, தி.மு.க முதன்முறையாக ஆட்சியைப் பிடித்த 1967 காலகட்டங்களில் பள்ளி மாணவனாக இருந்த ஸ்டாலின், தனது நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு 'கோபாலபுரம் இளைஞர் தி.மு.க' என்ற அமைப்பை ஏற்படுத்தி தலைவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடுவது, சமூகப்பணி செய்வது என மாணவப் பருவத்திலேயே அரசியல் செயல்பாடுகளில் இறங்கிவிட்டார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச உறவுகளின் நெருக்கடிகளும் புதிய உலக ஒழுங்கும்

கணநாதன்

பனிப்போரின் முடிவில் இருந்து நிலவிய ஐக்கிய அமெரிக்காவின் தலைமையிலான ஒரு துருவ உலக ஒழுங்கின் (unipolar world order) ஒப்பீட்டு உறுதித்தன்மை (stability) மற்றும் பொருளாதார வளர்ச்சியானது, இன்று உறுதி அற்ற ஒழுங்கு நிலை குலைந்த பல்துருவ உலக ஒழுங்கிற்கு (multi polar world) மாற்றம் பெற்று வருகின்றது. முன்னாள் ஐக்கிய அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் வெளியுறவுக் கொள்கை, அமெரிக்க-சீனா புவிசார் அரசியல் மோதல், சீனா மற்றும் ரஷ்யாவின் வளர்ந்து வரும் நெருக்கம், உள்ளக நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் ஐரோப்பா மற்றும் பிரெக்ஸிட் (Brexit) என்று அழைக்கப்படும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவின் வெளியேற்றம், எழுச்சியுற்று வரும் ஈரான், இந்தியா, பாகிஸ்தான் பகைமைப் போக்கு ஆகிய போக்குகள் அமெரிக்காவினதும், மேற்குலகினதும் நலன்களைப் பேணிவரும் தாராளவாத உலக ஒழுங்கிற்கும் (liberal world order) அதன் நீட்சியாகவிருக்கும் சர்வதேச பன்முகப் பல்தரப்புறவுக்கும் (multilateralism) சவால்விடும் காரணிகளாக மாறியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவின் வெளியேற்றத்தையடுத்து அமெரிக்கா தலைமை வகிக்காத ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு தேசியவாத அரசியற் சக்திகளின் எழுச்சி (nationalistic forces) ஆகியவற்றைத் தொடர்ந்து சர்வதேச பல்தரப்புறவு அமைப்புகளைப் பாதுகாத்தல், பிராந்திய கூட்டுறவுகளைப் பேணுதல் போன்ற பிரச்னைகளைக் கையாள்வதில் பிரான்ஸ் மற்றும் யேர்மனி ஐரோப்பிய தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்நிலையில் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி எவ்வாறு அமெரிக்க சீனா முறுகல் நிலையினை கையாளப் போகின்றன் மற்றும் வலுச் சமநிலை மாற்றங்களும் அதன் உலக மயமாக்கல் மற்றும் பொருளாதார வளர்ச்சிகளில் ஏற்படுத்தப் போகும் தாக்கங்களும் பல்தரப்புறவு உலக ஒழுங்கின் எதிர்காலம் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஐரேப்பிய அமெரிக்க அத்திலாந்திக் சமுத்திரம் கடந்த உறவானது (transatlantic relations) பல தசாப்தங்களாக தாராளவாத சர்வதேச ஒழுங்கின் ஓர் அடையாளமாகவும், மேற்கின் நலன்களை மையமாகக் கொண்ட உலகளாவிய அமைதி மற்றும் உறுதித்தன்மையின் மூலமாகவும் இருந்து வருகிறது. ஆனால் அதிகரித்து வரும் மக்கள் மய தேசியவாத சக்திகளின் எழுச்சியும், சமூகங்களுக்கு இடையிலான சமத்துவமின்மையும், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஏற்பட்டு வரும் உள்நாட்டு அரசியற் போக்குகளும் ஐரேப்பிய அமெரிக்க வரலாற்று உறவுகளில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

தாராளவாத, விதிகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கானது (rule based international Order) அனைத்து தேசங்களினதும் நலன்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உயர்ந்த மனப்பான்மையின் அல்லது சிந்தனையின் விளைவு அல்ல. மாறாக மேற்குலக சக்திகளின் செல்வாக்கின் ஒரு நீட்சியாக அவர்களின் பூகோள அரசியல் பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் ஒழுங்காகவே இது இருந்துவருகின்றது. மேலும், இது முன்னாள் சோவியத் யூனியனுடனான ஒரு விரிவான பனிப்போரினால் ஈர்க்கப்பட்டு, நீடித்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம் இதன் ஒரு முக்கிய அம்சமாகவிருந்தது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் அறிவியல் மற்றும் ஆராய்ச்சியில் தனித்துவமான உலகளாவிய முதலீடுகளைத் தூண்டியதுடன் மேற்குலகின் ஆதிக்கப் பரப்பினை சர்வதேசமெங்கும் விரிவுபடுத்தி சர்வதேச பன்முகப் பலதரப்புறவினைப் பலப்படுத்தி தங்களுடைய வலுச் சமநிலையினைப் பேணிக்கொண்டது. இது ஒரு பெரும் தாராளவாத அமெரிக்க மூலோபாயத்தை (US liberal grand strategy) சர்வதேசமெங்கும் சாத்தியமாக்கியது.

வரலாற்றில் எப்போதும் சர்வதேச ஒழுங்கானது பெரும்பாலும் உலகளாவிய அதிகார வலுச் சமநிலையின் இயக்கமாகவே இருந்துவருகின்றது. பனிப்போரின் போது மேற்கில் வளர்ந்த தாராளமய ஒழுங்கு இந்த விதிக்கு விலக்கல்ல. ஏனெனில் இது முக்கியமாக வல்லரசுகளுக்கிடையேயான இருமுனை போட்டியின் விளைவாகவே மேற்குலகின் இத் தாராளவாத உலக ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது. பனிப்போர் முடிவடைந்து சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்த போது, உலகம் அமெரிக்கா தலைமையிலான ஒரு துருவமாக மாறியது. (unipolar world order). இம் மாற்றமானது அமெரிக்காவையும், ஐரோப்பிய நட்பு நாடுகளையும், மேற்கத்திய தாராளமய ஒழுங்கை பெரியளவில் உலகளாவிய ஓர் ஒழுங்காக கொண்டுவர இடமளித்தது. இன்றைய பன்முகப் பல்தரப்புறவு முறைமையானது இத்தாராளவாத உலக ஒழுங்கின் மேற்குலகின் நலன்களினடிப்படையிலான ஓர் முறைமையாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. ஆனால், இன்றைய ஆசியாவின் எழுச்சியும் குறிப்பாக சீனாவின் பெரும் பொருளாதார அரசியல் வளர்ச்சியானது இத் தாராளமய உலக ஒழுங்கை (liberal world order) அடிப்படையாகக் கொண்ட பன்முகப் பல்தரப்பு உறவையும் (multilateralism) அதன் அமைப்புகளான ஐ.நா அமைப்புகள் முதற்கொண்டு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச மனித வுரிமை சட்டங்கள் அதன் அமைப்புகள் ஆகியவற்றை தனக்குச் சார்பான ஒழுங்காக மாற்றியமைக்கும் முன் முயற்சியில் இறங்கியுள்ளது. எனவே, இன்று பன்முகப் பல்தரப்புறவானது இப்பல்துருவ உலக ஒழுங்கில் (multi polar world order) எவ்வாறு மாற்றம் பெறப்போகின்றது என்பதே எம்முன்னால் உள்ள பெரும் கேள்வியாக உள்ளது.

> ❝ உலகமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைவுகளுக்குப் பின்னர், உலகம் மீண்டும் அமெரிக்க, சீன சக்திகளுக்கு இடையிலான உலக வலுச் சமநிலையில் தோன்றியிருக்கும் பாதிப்புகள், புவிசார் அரசியல் போட்டிகள், தேச அரசுகளின் உள்நாட்டு பாதுகாப்புவாதம், ஒரு தலைப்பட்ச பொருளாதாரத் தடைகள், சர்வதேச உடன்படிக்கைகளிலிருந்து விலகிக் கொள்ளுதல் போன்றவற்றால் உலகானது பல கூறுகளாக பிரிவுபட்டு நிற்கின்றது. ❞

அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தி மேற்கத்திய தாராளமய ஒழுங்கை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பன்முகப் பல்தரப்புறவானது இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான பன்முக அமைப்பு, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசுகளுக்கு இடையிலான "நடத்தை முறைகள்", "பிரிக்க முடியாத தன்மை" மற்றும் "பரவலான பரஸ்பர ஆதரவு" ஆகிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டது "principles of conduct", "indivisibility" and "diffuse reciprocity"). தொடர்ச்சியான ஒன்றுடன் ஒன்று கட்டமைப்பைக் கொண்ட, பொருளாதார மேம்பாடு, சர்வதேச பாதுகாப்பு, உலக சுகாதாரம், மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பலதரப்பு கட்டமைப்பானது பனிப்போரின் முடிவை அடுத்து விரைவாக வளர்ந்து வந்தது. இது ஐ.நா., உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு, நேட்டோ போன்ற பல அமைப்புகளின் வெளிப்பாடாகவும், மேலும் ஜி 7 அல்லது ஜி 20 போன்ற முறைசாரா அமைப்புகளாகவும் பன்முகப் பல்தரப்புறவானது பெருவிருட்சமாக ஒரு சர்வதேச முறைமையாக உருவாக்கம் பெற்றுள்ளது. வளர்ந்து வந்த தாராளமய சர்வதேச ஒழுங்கின் ஒரு முக்கிய அங்கமாக பன்முகத்தன்மை பரிணாம வளர்ச்சியடைந்தது. இச் சர்வதேச உலக ஒழுங்கு முறைமையினடிப்படையிலேயே உலகளாவிய ஆளுகை (global governance) என்ற கருத்து முதன்முதலில் உருவாக்கப்பட்டு இன்று பல்வேறு சர்வதேச சட்டங்களாகவும் நெறிமுறைகளாகவும் அமைப்புகளாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது.

ஆனால், இன்று பல தசாப்தங்களாக உலகமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைவுகளுக்குப் பின்னர், உலகம் மீண்டும் அமெரிக்க, சீன சக்திகளுக்கு இடையிலான உலக வலுச்சமநிலையில் (Balance of power) தோன்றியிருக்கும் பாதிப்புகள் புவிசார் அரசியல் போட்டிகள் (geopolitical rivalry), தேச அரசுகளின் உள்நாட்டு பாதுகாப்புவாதம் (protectionism), ஒருதலைப்பட்ச பொருளாதாரத் தடைகள், சர்வதேச உடன்படிக்கைகளிலிருந்து விலகிக்கொள்ளுதல் போன்றவற்றால் உலகானது பல கூறுகளாக பிரிவுபட்டு நிற்கின்றது. இது சர்வதேச பன்முக பல்தரப்பு உறவுக்கும் மேலைத்தேய உலக ஒழுங்குக்கும் நெருக்கடி நிலையை அல்லது வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அவர்களின் "அமெரிக்கா முதல்" கொள்கையைப் பின்பற்றி, சர்வதேச தாராளமய ஒழுங்கின் முன்னணியில் அமெரிக்காவின் பாரம்பரிய பங்கைக் கைவிட்டு பாரிஸ் காலநிலை மாநாடு (Paris Climate Change Agreement)), ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் மற்றும் டிரான்ஸ்-பசிபிக் கூட்டாண்மை (Trans Pacific Partnership) ஆகியவற்றிலிருந்து விலகியமை இந்நெருக்கடியைத் தீவிரப்படுத்தியிருந்தது. சீனா, பலதரப்பு முறையை தனக்கு சாதகமாக வளைப்பதை நோக்கமாகக் கொண்டு, ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organisation) அல்லது சீனா அபிவிருத்தி வங்கி (China Development Bank) போன்ற மேற்கினால் அவர்களின் நலன்களைப் பேணும் பொருட்டு உருவாக் கப்பட்ட அமைப்புகளுக்கு இணையான உலக ஆளுகை (global governance) முறைமைகளை அமைத்து வருகிறது. பலதரப்புவாதத்தின் பாரம்பரிய ஆதரவுச் சக்தியாக அதனை முன்னெத்துவந்த ஐரோப்பிய ஒன்றியம், அதனுள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளாலும் உலக வலுச்சமநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களாலும் தனது பெரியளவான அதிகால செல்வாக்குப் போக்கை இப்பல்தரப்பு உறவு முறைமையில் இழந்து வருகின்றது.

எனவே, இன்று நாம் கண்டுவரும் இம்மாறுதல்களானது உண்மையில் பன்முக பல்தரப்பு உறவுகளுக்கான நெருக்கடி என்பதைவிடவும் ஆசியாவை மையமாகக் கொண்ட சீனாவால் முன்னெடுக்கப்படும் மேற்கினால் கட்டியெழுப்பப்பட்ட பன்முகப் பல்தரப்பு உறவுக்கு மாறாக தோற்றங்கொள்ளும் ஒரு கட்டமைப்பு சார் முறைமை மாற்றங்களாகவும் இம்மாற்றங்களைக் கருதமுடியும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) பின்வரும் பாடல் வரிகளைப் பூர்த்தி செய்க.
கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
.................................................................
.................................................................

08) விடை எழுதுக.
1. " நண்பன்'' என்பதன் பெண்பால் ..................................
2. குற்றவாளி என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ..................................
3. தமிழில் உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை ..................................
4. " தீபாவளி'' என்பதன் சரியான எழுத்து வடிவம் ..................................
5. கடல் + கரை என்பதனைச் சேர்த்தெழுதுக ..................................

09) மாணவர்களால் வீட்டுக்காகவும், பாடசாலைக்காகவும் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் நிறைய உள்ளன. அந்த வகையில் " நான் பாடசாலைக்கு ஆற்றுகின்ற கடமைகள் பற்றி'' மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியமானது சரியான எழுவாய் பயனிலைகளுடன் 5 சொற்களுக்கு மேற்பட்டதாக அமைதல் வேண்டும்.
1. ..................................................................................................
..................................................................................................
2. ..................................................................................................
..................................................................................................
3. ..................................................................................................
..................................................................................................

10) படங்கள் குறிப்பவற்றை ஆங்கிலத்தில் எழுதுக.
1.  ..............................
2.  ..............................

11) வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிந்து எழுதுக.
1. I am ........................ (go / going) out
2. How ........................ (is / are /) you?

12) " இது எனது புத்தகம்'' என்பதை ஆங்கிலத்தில் எழுதுக.
..................................................................................

13) தமிழ்க்கருத்து எழுதுக.
1. Hands up ..............................
2. Are you ready? ..............................

14) பின்வரும் தமிழ்ச் சொற்களில் சிங்களச் சொல்லினைத் தமிழ் உச்சரிப்பில் எழுதுக.
i. யானை .............................. ii. பால் குடியுங்கள் ..............................

15) தமிழ்க் கருத்து எழுதுக.
i. பொத்த தென்ன ..................................................................

16) சரியான விடையைக் கணித்து எழுதுக.
1) 21ஐ கூட்டுத்தொகையாகப் பெறுவதற்கு இடைவெளிகளுக்குப் பொருத்தமான இலக்கங்களை எழுதுக.
9 + 5 + ..........................
............ + 7 + 6
8 + 7 + ..........................

2) 4, 6, 9 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை இறங்குவரிசையில் எழுதுக.
.............................. , 946 , .............................. , .............................. , 496 . ..............................

3) தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக.
19300 : ..................................................................................

4) குறிப்பிட்ட ஒரு நாளில் கண்காட்சியைப் பார்க்க வந்த ஆண்கள் 416 பேர் ஆகும். பெண்கள், ஆண்களின் எண்ணிக்கையின் அரைவாசியாகும். குறிப்பிட்ட நாளில் கண்காட்சியைப் பார்க்க வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

5) பின்வரும் உரோமன் எண்களால் காட்டப்படுபவற்றை இந்து அராபிய எண்களில் எழுதுக.
xiv : .............................. ix: ..............................

6) 1.

| l | ml |
|---|---|
| 7 | 450 |
| + 2 | 650 |
| | |

2.

896
+ 175
______

3. வெற்றுக்கூடுகளை நிரப்புக.

|   | 6 | 8 | 3 | 0 |
|---|---|---|---|---|
| - | 2 | 3 | □ | □ |
|   | 4 | □ | 8 | 4 |

7) ஒரு பையில் 10 சிவப்புநிற பலூன்களும் 8 மஞ்சள் நிறப் பலூன்களும் இருந்தன. அவ்வாறான 6 பைகளிலுள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?..............................

8) ஒருவர் 5kg தேயிலையை வாங்கி 200g பைக்கற்றுகளாகப் பொதி செய்தார். அவர் எத்தனை பொதிகள் செய்திருப்பார்?..............................

9) அடைப்பினுள் காணப்படும் இலக்கங்களை மட்டும் பயன்படுத்தி விடை எழுதுக.

| 8 3 |
|---|
| 2 4 |

I) மிகப் பெரிய எண்ணை ஆக்கி, அதன் எண்பெயரை எழுதுக.
..................................................................................
II) மிகப்பெரிய எண்ணின் நூறினிடத்து இலக்கத்தின் பெறுமானம் யாது?
..................................................................................

10) ஒரு தோட்டத்தில் வரிசையில் 12 மரங்கள் வீதம் 3 வரிசைகளும், நிரையில் 6 மரங்கள் வீதம் 8 நிரைகளும் உள்ளன. இத்தோட்டத்தில் உள்ள மரங்கள் எத்தனை?
..................................................................................

11) 250 கிராம் அவரைக்காயின் விலை ரூபா 23 எனின், 1kg 750g அவரைக்காயின் விலை யாது?
..................................................................................

12) 3621 இல் இலக்கம் 6 உள்ள இடம் யாது? ..............................
இலக்கம் 3 காட்டும் பெறுமானம் யாது? ..............................

13) இலக்கத்தில் எழுதுக. எண்ணாயிரத்து நூற்றைம்பத்தெட்டு ..............................

# பி.சி.ஆர். சோதனைகளில் 7 முதல் 8 சதவீதமான தொற்றாளர் அடையாளம்

கொழும்பு,மே 04
இலங்கையில் ஒரேநாளில் ஆயிரத்து 891 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை, மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 7 தொடக்கம் 8 சதவீதமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று தொற்று நோயியல் பிரிவின் விஷேட நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தொற்றுக்கு இலக்கானவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 753 ஆக அதிகரித்தது.

இந்நிலையில், 764 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று முன்தினம் வீடு திரும்பினர்.

இதற்கமைய, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 97 ஆயிரத்து 848 ஆக அதிகரித்தது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 687 இல் இருந்து ஆக 696 அதிகரித்தது. (எ)

# பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு,மே 04
மாலை அல்லது இரவு நேரங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ, மத்திய, மேல் மற்றும் வடமேற்கு மாகாணங்கள் மற்றும் பொலன்னறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கனமழையை எதிர்பார்க்கலாம்.

இடியுடன் கூடிய மழைக்காலங்களில் தற்காலிகமாக உள்ளூர்மய மாக்கப்பட்ட வலுவான காற்று மற்றும் மின்னல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# விபத்துக்களில் இருவர் மரணம்

கொழும்பு,மே 04
ஹோமாகம மற்றும் மாவனெல்லை பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயிரிழந்தனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் ஹோமாகம - அத்துருகிரிய வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியின் குறுக்காக பயணித்த பெண் ஒருவரை மோதியதில் விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் விபத்துக்குள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இந்தப் பெண் உயிரிழந்தார்.

ஹோமாகம, கெமுனு மாவத்தை பகுதியைச் சேர்ந்த 22 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை கொழும்பு - கண்டி வீதியின் 99 ஆம் கட்டை பகுதியில் பேருந்திலிருந்து விழுந்து நபர் ஒருவர் உயிரிழந்தார். 29 வயது கடுகன்னாவ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)

# பொய்ச் செய்திகள் பரவுவதை பொறுப்புடன் தடுக்க வேண்டும்

## அனைத்துலக ஊடக சுதந்திர நாளில் ஜனாதிபதி கோட்டாபய எடுத்துரைப்பு



**கொழும்பு,மே 04**
**உண்மைச் செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பது மட்டுமே ஊடகங்களின் பணியல்ல, உண்மையற்ற (பொய்) செய்திகள் மக்களுக்குள் பரவி குழப்ப நிலைகளை ஏற்படுத்துவதையும் ஊடகங்களே பொறுப்புடன் தடுக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அனைத்துலக ஊடக சுதந்திர நாளான நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

இன்று நாடு சந்தித்து நிற்கும் பெரும் சுகாதார நெருக்கடியான ஒரு காலகட்டத்தில், அவ்வாறு செயல்படுவதே ஊடகங்களின் பெரும் பொறுப்பாகவும் இருக்க முடியும்.

நிறைவுகள் தொடர்பாகப் பேசுவதைத் தவிர்த்து, குறைகளை மட்டுமே கேள்விக்குட்படுத்தி, ஒரு நாட்டையும் அதன் மக்களையும் திறம்பட நிர்வகித்துச் செல்வதில் ஓர் அரசாங்கம் சந்திக்கும் சவால்களை விமர்சிப்பது அல்லாமல், மக்களை நல்வழிப்படுத்திச் செல்வதில் அரசாங்கத்துக்கு ஆக்கபூர்வமான உறுதுணையாகவும் ஊடகங்களே திகழ வேண்டும்.

அவையே, ஊடகச் சுதந்திரம் என்பதன் உள்ளார்ந்த அர்த்தமாகும்.

எமது நாட்டில் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் எமது அரசாங்கம் உறுதிப்பாட்டோடு உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ)

# இனப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்க ஸ்டாலின் ஒத்துழைக்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



கொழும்பு, மே 04
இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்வு கிடைக்க ஒத்துழைக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளை பின்தள்ளி தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது.

தி.மு.க. வெற்றி பெற்றதால் புதிய தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தெரிவாகியுள்ளதுடன் அவர் எதிர்வரும் 6 ஆம் திகதி முதலமைச்சராக பதவியேற்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ஸ்டாலினின் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்து இராதாகிருஷ்ணன் ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலின் இரு நாட்டு மீனவர் பிரச்னைக்கும் நிரந்தரத் தீர்வு வழங்க வேண்டும்.

அத்துடன் தி.மு.கவின் வெற்றி இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள வெற்றியாக அமையும் என எதிர்பார்ப்பதாகவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (எ)

# எரிபொருள் தட்டுப்பாடு செய்தியில் எந்த உண்மையும் இல்லை

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, மே 04
நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படும் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை. அத்துடன் டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கப்படாமல் நிலையாக வைத்திருக்க முடியும் என்ற உறுதியை வழங்கினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது என்ற உறுதியை வழங்க முடியும் என மின்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படப்போவதாகத் தெரிவிக்கப்படும் செய்தி உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறான எந்த நிலையும் இல்லை. தேவையான எரிபொருள் தொகை நாட்டுக்குள் இருப்பதை பொறுப்புடன் தெரிவிக்கின்றேன். ஒவ்வொரு நாளும் காலை 7 மணியளவில் நாட்டில் இருக்கும் எரிபொருள் வகைகளின் அளவு குறித்த தொகையை குறுந்தகவல் செய்தி ஊடாக நான் பெற்றுக்கொள்கின்றேன். இதுதொடர்பில் நான் தனிப்பட்ட முறையிலும் நாளாந்தம் தேடிப்பார்க்கின்றேன். அதனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை- என்றார்.

மேலும், எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதாகவும் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள்களின் விலை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. இருந்தபோதும் உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று டொலரின் பெறுமதியும் அதிகரித்துச் செல்கின்றது. எமது நாட்டில் 2019 செப்ரெம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் தற்போதும் எரிபொருள்களால் ஏற்பட்டு வரும் நஷ்டத்தை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் பொறுப்பேற்றுக் கொண்டு, மக்களுக்கு அதன் நிவாரணத்தை வழங்கி வருகின்றோம். இந்த நஷ்டத்தை தாங்கிக்கொள்ள முடியாத நிலை வந்தால் அதுதொடர்பில் நாங்கள் மக்களுக்கு அறிவிப்போம். அதனால், எரிபொருள்களின் விலையை அதிகரிக்க இதுவரைக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை- என்றார். (எ)

### நேற்று காலை முதல்

# பல பிரதேசங்கள் தனிமைப்படுத்தல்

கொழும்பு,மே 04
நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டன என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குராங்கெத பொலிஸ் அதிகாரப்பிரிவுக்குட்பட்ட ரத்மெடிய கிராம உத்தியோகத்தர் பிரிவு, களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை வடக்கு பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பின்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு நாரஹென்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, பின்வத்த மேல் கிராம உத்தியோகத்தர் பிரிவு, பண்டாரகமை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பண்டாரகமை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு,

கொழும்பு மாவட்டத்தின் பாதுக்கை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட உக்கல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு, மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு முன்முனை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட திஸ்ஸ வீரசிங்கம் சதுக்க கிராம உத்தியோகத்தர் பிரிவு, கம்பஹா மாவட்டத்தின் வத்தளை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட அல்விஸ் வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பிரதேசங்கள் நேற்றுக் காலை 06 மணி முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டன- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இரண்டு கோடியை நெருங்குகிறது தொற்று பாதிப்பு!

## நேற்று மட்டும் 3417 பேர் பலி!

புதுடில்லி, மே 04

இந்தியாவில் கொரோனா தொற்று பாதிப்பு 2 கோடியை நெருங்குகின்றது. அங்கு, நேற்று மட்டும் 3 இலட்சத்து 68 ஆயிரத்து 147 பேர் தொற்றுக்கு இலக்காகினர்.

இதன்படி, இந்தியாவில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 99 இலட்சத்து 25 ஆயிரத்து 604ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே தொற்றால் நேற்று 3,417 பேர் உயிரிழந்தனர். இதனால், தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 18 ஆயிரத்து 959 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 34 இலட்சத்து 13 ஆயிரத்து 642 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். நாடு முழுவதும் நேற்று வரை 15 கோடியே 71 இலட்சத்து 98 ஆயிரத்து 207 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. (ஐ)





## இரு படகுகள் மோதி விபத்து; பங்களாதேஷில் 26 பேர் பலி!

டாக்கா, மே 04

பங்களாதேஷின் பத்மா ஆற்றில் நேற்று இரு படகுகள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் 26 பேர் பலியாகினர். மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர்.

வேகப் படகொன்று மற்றொரு படகுடன் மோதி நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றதாக பங்களாதேஷ் மடரிபூர் மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மிராஜ் ஹூசைன் கூறினார்.

சம்பவத்தை அடுத்து களமிறங்கிய மீட்புப் படையினர் இறந்தவர்களின் 26 சடலங்களை மீட்டுள்ளனர். மேலும் சிலர் காணாமல் போன நிலையில் அவர்களைத் தேடும் பணிகள் தொடந்து இடம்பெற்று வருகின்றன என்ற பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி ஆற்றில் மூழ்கிய ஐந்து பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் அதிகாரி மிராஜ் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற நீர்வழிப் பயணங்களால் ஏற்படும் விபத்துக்களால் பங்களாதேஷில் வருடாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் 5ஆம் திகதி நாராயங்கஞ்ச் மாவட்டத்தில் ஷீட்லக்யா ஆற்றில் 100 பயணிகளை ஏற்றிச் சென்ற சிறிய கப்பல் ஒன்று பெரிய கப்பலுடன் மோதியதில், குழந்தைகள் பெண்கள் உட்பட 26 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மியன்மாரில் இராணுவத்தினரால் 7 போராட்டக்காரர்கள் கொலை!

யங்கூன், மே 04

மியன்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடும் 7 பேரை நேற்று இராணுவம் சுட்டுக் கொன்றது. தலைநகர் யங்கூன், மண்டேலே நகரங்களில் இடம்பெற்ற போராட்டங்களிலேயே இந்த மரணங்கள் இடம்பெற்றுள்ளன.

மிய்னமாரில் பெப்ரவரி மாதம் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து 700 வரையிலான பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடியவர்கள் எனறு கூறப்படுகின்றது.

இதனிடையே, இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் அமைப்புகள் சர்வதேச கவனத்தை ஈர்க்க மியன்மார் மக்களின் ஒற்றுமை குரல் உலகை உலுக்கும் என்ற முழக்கத்தை ஏற்படுத்தி உள்ளனர். (ஐ)



## பூமிக்கு பாதுகாப்பாக திரும்பினர் 4 சர்வதேச விணிவெளி வீரர்கள்

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் 4 விண்வெளி வீரர்கள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூமிக்கு திரும்பினர்.

1968ஆம் ஆண்டு நிலவுக்குச் சென்றுவிட்டு அமெரிக்காவின் 'அப்பலோ 8' விண்கலம் விண்வெளி வீரர்களுடன் அதிகாலையில் இருளில் பூமிக்குத் திரும்பியது. அதன்பிறகு அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருளில் தரையிறங்கியது இப்போதுதான்.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்தை நிர்மாணித்துள்ளன. இந்த விண்வெளி நிலையத்திலிருந்து 4 வீரர்கள் டிராகன் விண்கலம் மூலம் பூமிக்கு திரும்பினர். அந்த விண்கலம் பாராசூட் உதவியுடன் மெக்சிகோ வளைகுடா கடலில் இறங்கியது.

நான்கு விண்வெளி வீரர்களில் மூவர் அமெரிக்கர்கள், ஒருவர் ஜப்பானியர். நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து கடந்த நவம்பரில் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற அவர்கள், தமது 167 நாள்கள் ஆய்வுப் பணியை நிறைவு செய்த பின்னர் பூமிக்கு திரும்பியுள்ளனர். இதையடுத்து, தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் 7 பேர் ஆய்வுப் பணியில் உள்ளனர். (ஐ)

## அமெரிக்காவில் 10 கோடி பேர் கொரோனா தடுப்பூசி பெற்றனர்!

நியூயோர்க், மே 04

உலக அளவில் கொரோனா வைரஸ் பாதிப்பில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. கொரோனா உயிரிழப்பிலும் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கிறது.

அதே சமயம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளை அமெரிக்கா அரசு தீவிரமாக செயல்படுத்தி வருவதன் பலனாக அங்கு கடந்த சில வாரங்களாக வைரஸ் பாதிப்பு குறைந்து வருகிறது.

ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் கொரோனா தடுப்பூசி பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருவதால் திட்டமிட்டதைவிட பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. அந்தவகையில் அமெரிக்காவில் இதுவரை 10 கோடி பேர் கொரோனா தடுப்பூசியை முழுமையாக போட்டுக் கொண்டனர். அதாவது தடுப்பூசியின் 2 டோஸ்களையும் போட்டுக் கொண்டனர் என்று அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. இது அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் 30.5 சதவீதமாகும்.

அதேபோல் 10 கோடியே 44 இலட்சத்துக்கும் அதிகமானோர் குறைந்தது கொரோனா தடுப்பூசியின் ஒரு டோஸ் போட்டுள்ளனர். இது மொத்த மக்கள் தொகையில் 43.6 சதவீதம் என்றும் அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. (ஐ)



## சீனாவில் இயற்கை அழிவு: 11 பேர் பலி; 102 பேர் காயம்!

பீஜிங், மே 04

சீனாவில் ஏற்பட்ட பெரு மழை, வெள்ளம், புயல் காரணமாக 11 பேர் உயிரிழந்தனர். 102 பேர் படுகாயங்களுக்கு இலக்காகினர். அத்துடன் மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள ஜியாங்சு மாகாணத்தின் நாந்தோங் நகரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிலையில், மணிக்கு 162 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியதால் இதில் நூற்றுக்கணக்கான மரங்களும், மின்கம்பங்களும் சாய்ந்தன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு மீட்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதுவரை 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## மேற்குவங்கத்தில் ஆட்சி அமைக்க உரிமை கோரினார் மம்தா பனர்ஜி!

கொல்கத்தா, மே 04

மேற்கு வங்கத்தில் நடந்த தேர்தலில் மம்தா பனர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் பெரு வெற்றி பெற்றது.

இந்தியாவின் மாநிலமான மேற்குவங்கத்தில் கடந்த மார்ச் 27ஆம் திகதி தேர்தல் நடந்தது. முடிவுகள் நேற்று வெளியாகின. இதன்படி, ஆளும் கட்சியான அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் 213 ஆசனங்களை கைப்பற்றியது. பாரதிய ஜனதா கட்சி 77 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஏனைய கட்சிகள் எவையும் எந்த ஆசனத்தையும் கைப்பற்றவில்லை.

இந்நிலையில், வெற்றி பெற்ற திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மம்தா பனர்ஜி நேற்றிரவு மேற்கு வங்க ஆளுநர் ஜகதீப் தங்கரை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதனிடையே, மம்தா பனர்ஜி தேர்தலில் தோல்வியடைந்தமையால் அவரின் தொகுதியில் தோல்வியடைந்தமையால் மறு வாக்கு எண்ணிக்கை கோரி நீதிமன்றம் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு





# 35 கிலோகிராம் கஞ்சாவுடன் வடமராட்சியில் ஒருவர் கைது!

வடமராட்சி, மே 04

35 கிலோ கஞ்சாவை வைத் திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

வடமராட்சி - பருத்தித் துறை - இன்பருட்டி பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இந்தக் கைது இடம்பெற்றது. இதன்போது 20 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார்.

கைதானவர்களை நீதிமன் றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காங்கேசன் துறையில் 180 கிலோ கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

(ஐ-2)

# நிரந்தர தீர்வுக்கு தி.மு.க. அரசு ஆதரவை வழங்க வேண்டும்

## சுரேஷ் பிறேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், மே 04

தமிழக சட்டமன்ற தேர்தல் கள் முடிவுகளின் படி தமிழகத் தில் திராவிட முன்னேற்றக் கழ கத்தின் தலைமையிலான கூட் டணி அமோக வெற்றியீட்டி ஆட்சியமைக்கவுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஆட்சிப் பீடம் ஏறவுள்ள திராவிட முன் னேற்றக்கழகத்தை வாழ்த்தியுள் ளதுடன் இலங்கைத் தமிழர் களின் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்கு தனது ஆதர வினை நல்கவேண் டும் என்ற வேண்டுகோளையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் தலைவர் சுரேஷ் க.பிறே மச்சந்திரன் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத் துள்ள ஊடக அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு தமிழக மக்கள் வழங்கிய பிரமாண்ட மான ஆதரவுக்கும் அதனால் அடைந்த வெற்றிக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்திற் கும் அதன் தோழமை கட்சி களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வாழ்த்துகளையும் பாராட்டுகளை யும் தெரிவித்துக்கொள்கிறது.

உலக தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பதிலும் அதற்காகக் குரல் கொடுப்பதி லும் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ச்சியாக அரும் பணி ஆற்றிவந்துள்ளது. குறிப் பாக இலங்கைத் தமிழர் பிரச்னை தீரவேண்டும் என்பதில் அறிஞர் அண்ணா முதல் கலைஞர் ஈறாக அக்கறையுடனேயே செயற் பட்டு வந்துள்ளனர்.

யுத்தம் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலை யில், ஈழத் தமிழர்களுக்கு உரிமையும் கிடைக்கவில்லை நீதியும் கிடைக்கவில்லை. இப் பொழுது பதவியில் இருக்கின்ற இலங்கை அரசாங்கமானது, தமிழ் மக்களின் காணிகளை மூர்க்கத்தனமாகப் பறித்தெடுப் பதிலும், அவர்களது வாழ்வி டங்களைக் கபளீகரம் செய்வ திலும் அவர்களது இருப்பைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய வகையில் செயற்பட்டு வருகின் றது. இத்தகைய ஒரு சூழ்நிலை யில், ஈழத் தமிழ் மக்களது இருப்பை, பாதுகாப்பை உத்தர வாதப்படுத்த தமிழகத்து ஆதர வென்பது மிகமிக முக்கியமா னது. அந்த ஆதரவு எப்பொழு தும் எமக்குக் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவை மாத்திரமல்லாமல், இலங்கை என்பது முற்றுமுழு தாக சீனாவின் ஆதிக்கத்திற்குள் சென்றிருக்கக்கூடிய சூழ்நிலை யில், யாழ்ப்பாண மாவட்டத் தின் பல தீவுகளைக்கூட சீனக் கம்பெனிகளுக்கு மாற்று மின் சாரத் திட்டங்களை மேற்கொள் வதற்காக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது. இலங்கையின் வடபகுதி ஈழத் தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசமாகும். இப்பகுதியில் சீன ஆதிக்கம் என்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமன்றி தமிழகத்தின் பாதுகாப்பிற்கும் பாரிய அச்சு றுத்தலாகும். ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சி னைக்கான ஒரு முழுமையான தீர்வே இவ்வாறான அச்சுறுத் தல்களிலிருந்து விடுபட உதவி கரமாக இருக்கும்.

வடக்கு-கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பல இலட்சம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்றியும் வாழ்வாதாரம் இன்றியும் இருக்கின்றனர். கொழும்பு அரசாங்கமானது இம்மாகாணங்களின் வளர்ச் சிக்கு எத்தகைய முயற்சிகளை யும் மேற்கொள்ளாமல் மாற் றாந்தாய் மனப்பான்மையுட னேயே செயற்படுகின்றது. இவ் வாறான ஒரு சூழ்நிலையில், தமிழகத்து தொழில்முனை வோரை இயன்றவரை இலங் கையின் வடக்கு-கிழக்கு மாகா ணங்களில் முதலீடுகள் செய்ய ஊக்குவிக்குமாறும் உங்களைக் கோருவதுடன், இவை தொடர் பாக காலக்கிரமத்தில் உங்களு டன் கலந்துரையாடவும் விரும்பு கின்றோம். உங்களது சிறப்பான வெற்றிக்கு மீண்டும் ஒருமுறை எமது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித் துக்கொள்கின்றோம்."

# ஈழத் தமிழினம் நீதியும் உரிமையும் பெற தமிழகத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கும்

## வாழ்த்துச் செய்தியில் விக்னேஸ்வரன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், மே 04

"இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இனவழிப் புக்கு எதிராக அழுத்தமான குரல் ஸ்டாலின் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெறும் எனவும், இனவழிப்புக்கான நீதியையும், ஈழத் தமிழர்களுக்கான உரிமை யையும் பெற்றுத்தருவதற்கு தமிழகத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கும் என்றும் நாம் நம்பிக்கை கொள்கின் றோம்" யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள் ளார்.

தமிழகத்தின் புதிய முதல மைச்சருக்கு வாழ்த்து தெரி வித்து வெளியிட்டுள்ள அறிக் கையில் அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் முதலமைச்சர் வேட் பாளராக களமிறங்கி முதல் தேர்தலிலேயே சரித்திர வெற்றியை பெற்றுள்ள மு.க. ஸ்டாலினுக்கு எமது தமிழ் மக்கள் சார்பாக எனது மன நிறைவான வாழ்த்துகளை தெரி



வித்துக்கொள்கிறேன். மேலும் ஆறாவது முறையாக தமிழக சட்டப்பேரவையில் பெரும் பான்மையை பெற்று ஆட்சிய மைக்க உள்ள திராவிட முன் னேற்ற கழக உடன்பிறப்புக்கள் அனைவருக்குமே வாழ்த்து களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத் தின் ஆட்சியில் தமிழகம் பல வேறு துறைகளில் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என்றும் இந்தியாவின் முன்னணி மாநில மாக திகழும் என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

2009ஆம் ஆண்டு தமிழ் ஈழப்பரப்பில் இடம்பெற்ற கொடூரமான இனவழிப்பின் தொடர்ச்சியாக இன்றுவரை தமிழர் பிரதேசத்தில் கட்ட மைக்கப்பட்ட இனவழிப்பாக அது தொடருகின்றது. இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சி யான இனவழிப்புக்கு எதிராக அழுத்தமான குரல் ஸ்டாலின் மற்றும் தமிழ் நாட்டு அரசாங் கத்திடம் இருந்து கிடைக்கப் பெறும் எனவும், இனவழிப்புக் கான நீதியையும், தமிழ் ஈழத் தமிழர்களுக்கான உரிமையை யும் பெற்றுத்தருவதற்கு தமிழ கத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கும் என்றும் நாம் நம் பிக்கை கொள்கின்றோம்.

அதேபோல, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் மிகவும் நெருக்க மான உறவினை ஏற்படுத்துவ தற்கும் ஸ்டாலின் தலைமை யின் கீழ் தமிழக அரசாங்கம் காத்திரமான பல நடவடிக்கை களையும் மேற்கொள்ளும் என் றும் நாம் நம்பிக்கை கொண் டுள்ளோம்."

# ஆர்மேனிய இனப்படுகொலை தீர்மானம் ஈழத்தமிழர்களுக்கு காட்டிய பாதை

## சுட்டிக்காட்டுகின்றார் ரெலோ பேச்சாளர்

யாழ்ப்பாணம், மே 04

"இனப்படுகொலைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும் அதற்கான காலம் கடந்து விட் டது என்றும் கூறிவரும் எமது பிரதிநிதிகளில் சில ருக்கு பாடமாக ஆர்மேனியாவில் நிகழ்ந்த இனப் படுகொலையை 31 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள மையை குறிப்பிடலாம்" என ரெலோ அமைப்பின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்திருப்பதா வது:

"ஈழத் தமிழர்கள் தம்மீது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை உட்பட அட்டூழிய குற்றங் களுக்கு நீதிகோரி சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்ததோடு மனித உரிமை பேரவை யில் கொண்டுவரப்படும் தீர்மானங்களில் அது வலியுறுத்தப்பட வேண்டும் என்று அங்கத்துவ நாடுகளிடம் கோரி வருகின்றனர். முன்னைய மனித உரிமை ஆணையாளர்கள் அதற்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்திருக்கின்றனர். அதற்கு மேலாக ஈழத்தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் என்று தம்மை கூறும் சிலரும் இனப்படுகொலைக்கான ஆதாரம் இல்லை என்று கூறி வருகின்றனர்.

ஒரு சுயாதீன சர்வதேச விசாரணை பொறி முறையை ஏற்படுத்துவதன் மூலம் திரட்டப்படும் சாட்சியங்களின் ஊடாக எம் மக்களிடம் இருக் கும் இனப்படுகொலைக்கான ஆதாரங்களை ஆவ ணப்படுத்தி சர்வதேச நீதி பொறிமுறையின் ஊடாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் வலியுறுத்தி போராடி வருகிறார்கள்.

இனப்படுகொலைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும் அதற்கான காலம் கடந்து விட்டது என் றும் கூறிவரும் எமது பிரதிநிதிகளில் சிலருக்கு பாடமாக ஆர்மேனியாவில் நிகழ்ந்த இனப்படு கொலையை 31 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ள மையை குறிப்பிடலாம்.

1916ஆம் ஆண்டுகளில் துருக்கிய பேரரசை புரட்சி மூலம் கைப்பற்றிய புரட்சிப் படையினர் தங்கள் ராணுவத்தில் இருந்த ஆர்மேனியர் களையும், விடுதலை கோரிய ஆர்மேனிய மக்களையும் படுகொலை செய்ததோடு அவர் களில் பெரும்பகுதியினரை சிரிய நாட்டிற்கு துரத்தி விட்டார்கள்.

அந்த மக்களை நாடுகடத்து வதற்கு உதவிய குர்திஷ் துணை இராணுவப்படை யினர் ஆர்மேனிய பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்தியும் கொள்ளையடித்தும், கொலை செய்தனர். இயற்கை அனர்த்தங்கள், நோய், பட்டினியாலும் பலர் இறந்தனர். கிட்டத்தட்ட 8 இலட்சம் பேர் வரை உயிரிழந்தனர். பலர் துருக்கியில் தப்பியும் உள்ளனர். பலர் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். அவர்கள் வழித்தோன்றல்கள் இன்று புலம்பெயர் மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆர்மேனியா சுதந்திர நாடாக பிரகடனப்படுத் தப்பட்டது. இருந்தாலும் தமக்கு நடந்த கொடுமைகளை இனப்படுகொலையாக கருதி ஆர்மேனியர்கள் நீதிகோரி போராடினார்கள். இனப்படுகொலைக்கான ஆதாரமில்லை என்று துருக்கி தொடர்ந்தும் மறுத்து வந்தது. ஆனால் அவர்களின் போராட்டம் ஒரு நூற்றாண்டைக் கடந்தாலும் வெற்றி அடைந்து உலக நாடுகள் துருக்கியில் ஆர்மேனியர்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என்று ஏற்றுக் கொண்டுள்ளன. அதன் முக்கிய அம்சமாக குர்திஷ் துணைப் படையினர் ஆர்மேனிய மக்களுக்கு இழைத்த அட்டூழியங்களை துருக்கி அரசாங்கம் கண்டும் காணாமல் இருந்ததே, துருக்கி செய்த கொலைகளுக்கு சமமான மிகப்பெரிய குற்றமாக கருதப்படுகிறது. அன்று துருக்கிக்கு ஆதரவாக இருந்த ஜேர்மனி கூட இந்த குற்றங்கள் நடப்பதை தெரிந்தும் அதை தடுக்காமல் இருந்தது குற்றமாக கருதப்படுகிறது.

ஆகவே, ஈழத் தமிழர்களுக்கு நடந்த அட்டூழிய குற்றங்களில் இனப்படுகொலைக்கு ஆதாரங்கள் இல்லை என்று கூறி வருபவர்களும் இனப்படு கொலை நடைபெறவில்லை என்று கூறுபவர்க ளும் கூட குற்றவாளிகள் என்று கருதப்படுவதற்கு இடம் உண்டு.

இன்று சர்வதேச மனித உரிமை சட்டங்களின் அடிப்படையில் இனப்படுகொலை என்பது விரிவு படுத்தப்பட்ட அர்த்தங்களை கொண்டிருப்பத னால் ஈழத்தமிழர்களுடைய இனப்படுகொலை விவகாரத்தையும் நீதிப் பொறிமுறை முன் நிறுத்த முடியும் என்பதை ஆர்மேனியா தீர்மானத்தின் மூலம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களின் கோரிக்கை ஒருமித்த குரலில் தொடர்ச்சியாக ஒலிக்குமிடத்து பூகோள அரசியல் நலன்களை தாண்டி வெற்றி பெறும் என்பதற்கும் சிறந்த எடுத்துக் காட்டு" என சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமுனுகமவுக்கு மேலுமோர் இராஜாங்க அமைச்சு பதவி

கொழும்பு,மே 04

வாகன ஒழுங்குபடுத்தல் பேருந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு மேலுமொரு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் பொலிஸ் சமுதாய சேவைகள் இராஜாங்க அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி முன்னிலையில் அவர் பதவியேற்றுள்ளார். (எ)

ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

# அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று கடும் வாகன நெரிசல்



கொழும்பு,மே 04

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ நுழைவுக்கு அருகில் நேற்றுக் காலை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேற்றத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதை அடுத்து கட்டணம் செலுத்தும் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டது.

இதனால் மாத்தறை திசையிலிருந்து பயணிக்கும் வாகனங்கள் கஹதுடுவ கட்டணம் செலுத்தும் பகுதியில் கட்டணத்தை செலுத்தி வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதுவரையில் கொட்டாவ வெளியேற்றத்தில் கடமையாற்றும் 12 பேருக்கும், கடுவலை வெளியேற்றத்தில் கடமையாற்றும் 4 பேருக்கும் மற்றும் அத்துருகிரிய வெளியேற்றத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

# கடல்மார்க்கமாக இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் நுழைந்தால் ஆபத்து

## பொது சுகாதார பரிசோதகர்கள் எச்சரிக்கை



**கொழும்பு,மே04**

**கடல் மார்க்கமாக இந்திய மீனவர்கள் அநாவசியமாக இலங்கைக்குள் பிரவேசிக்கின்றனரா என்பது தொடர்பில் கடற்படை மற்றும் பொலிஸார் மிக அவதானத்துடன் கண்காணிக்க வேண்டும்.**

இவ்விடயத்தில் விஷேட அவதானத்துடன் செயல்படாவிட்டால் எதிர்வரும் நாள்களில் தற்போதுள்ளதை விட பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் மிக வேகமாகப் பரவுவதாகவே விஷேட மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். எவ்வாறிருப்பினும் இதுவரையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வைரஸ் பரவியதாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறிருப்பினும் இந்தியப் பிரஜைகள் உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவலாகச் செல்கின்றனர். இலங்கை மிகவும் அபாய கட்டத்திலுள்ள நாடாகும். கடல் மார்க்கமாக பெரும்பாலான இந்திய மீனவர்கள் அநாவசியமாக நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே, கடற்படையினர் மற்றும் பொலிஸாரிடம் இந்தியப் பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றனரா? என்பது தொடர்பில் மிக அவதானத்துடன் கண்காணிக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். காரணம் இந்தியப் பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதன் மூலம் பிறிதொரு வைரஸ் பரவ ஆரம்பித்தால் நாடு என்ற ரீதியில் நாம் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

எனவே, இந்தியப் பிரஜைகள் என்று சந்தேகிக்கின்ற எந்தவொரு நபரையும் அடையாளம் காணும் பட்சத்தில் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது சுகாதாரத் தரப்பினருக்கு அறிவிக்குமாறு மீனவர்களிடமும், கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் வாழும் மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதுதொடர்பில் மிக அவதானமாக செயல்படாவிட்டால் மீண்டும் வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதே எமது நிலைப்பாடாகும்- என்றார். (எ)

# வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட தொற்றாளர்கள் இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு மாற்றம்

கொழும்பு, மே 04

புத்தாண்டின் பின்னர் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட அதேவேளை, மிகக் குறைந்தளவானோரே குணமடைந்தனர்.

எனவே, இடைநிலை பராமரிப்பு நிலையங்களிலும் முழுமையாக தொற்றாளர்கள் சிகிச்சை பெறுவதால் கடந்த ஓரிரு தினங்களாக இனங்காணப்பட்ட தொற்றாளர்களுக்கு வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்படுகிறது.

இவ்வாறானவர்களை இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு அழைத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஏப்ரல்- 19 ஆம் திகதிக்குப் பின்னரே நாளாந்தம் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இதற்கமைய 19 ஆம் திகதி இனங்காணப்பட்ட தொற்றாளர்கள் சுமார் 10 நாள்கள் சிகிச்சையின் பின்னர் கடந்த இரு தினங்களின் பின்னரே வைத்தியசாலைகளிலிருந்து வீடு திரும்பியிருப்பார்கள்.

எனவே, கடந்த சில நாள்களாக புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டார்களே தவிர குணமடைந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும்.

இதன் காரணமாக இடைநிலை பராமரிப்பு நிலையங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இதுவரையில் செயல்படுத்தப்பட்டு வருகின்ற பெரும்பாலான இடைநிலை பராமரிப்பு நிலையங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன.

தற்போதுள்ள இடைநிலை பராமரிப்பு நிலையங்களில் படுக்கைகளின் அளவை அதிகரிப்பதற்கும், புதிதாக இடைநிலை பராமரிப்பு நிலையங்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது வீடுகளிலேயே தங்கவைக்கப்பட்டுள்ள தொற்றாளர்களை சிகிச்சைக்காக இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)

# 'போர்ட்சிற்றி' சட்டமூல விவாதத்துக்கு அரசாங்கம் ஏன் அவசரப்படுகின்றது?

## எதிர்க்கட்சி எம்.பி. ஹர்ஷன கேள்வி

கொழும்பு,மே 04

நாட்டுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், சிக்கலுக்குரியதுமான கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை ஒரு நாள் விவாதத்தோடு துரிதமாக நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் ஏன் அவசரப்படுகின்றது? தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையை தனக்கு தேவையான விடயங்களை மக்களுக்கு தெரியாமல் நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இந்த வாரம் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இதன்போது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. எனினும் இந்த விவாதத்தை இவ்வளவு அவசரமாக நடத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கோரினோம்.

ஒரே நாளில் இந்த விவாதத்தை நிறைவடைச் செய்ய வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளோம். அத்தோடு இந்தச் சட்ட மூலம் தொடர்பில் இதுவரையில் நீதிமன்றத்தால் சபாநாயகருக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

இன்று 4 ஆம் திகதி நீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. 5 ஆம் திகதி சட்ட மூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நாட்டுக்கு முக்கியத்துவமுடையதும், சிக்கலுக்குரியதுமான இந்தச் சட்டமூலம் ஏன் இவ்வளவு அவசரமாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இந்த விவாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாள்களேனும் ஒதுக்கப்பட வேண்டும்.

துறைமுக நகர அபிவிருத்தியை நிறுத்தும் எண்ணமோ எதிர்பார்ப்போ எதிர்க்கட்சிக்கு கிடையாது. எனவே, இதனை வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டமாக மாற்றுவதற்கு அது குறித்த சட்ட மூலத்துக்கு அதிகளவான காலத்தை ஒதுக்கி விவாதங்களில் ஈடுபட்டு ஜனநாயக ரீதியில் செயல்படுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையை அரசாங்கம் தனக்குத் தேவையான விடயங்களை மக்களுக்குத் தெரியாமல் நிறைவேற்றிக் கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்கிறது- என்றார். (எ)

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 215 பேர் சிக்கினர்

கொழும்பு,மே 04

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப்பகுதியில் 215 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த குற்றச்சாட்டில் 4,857 பேர் கைதுசெய்யப்பட்டனர் என பிரதிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய வீரர்களின் சுழலால் இலங்கை பெரு வெற்றி!




கண்டி, மே 04

இலங்கையின் அனுபவமற்ற வீரர்களின் சுழல் பந்து வீச்சு தாக்குதலில் பங்களாதேஷ் அணியை 209 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

2019 ஓகஸ்டில் தொடங்கிய உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டியில் இலங்கை அணி பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும்.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டத்துக்கு நியூஸிலாந்து, இந்தியா அணிகள் தெரிவாகி விட்ட நிலையில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

நான்காம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 177 ஓட்டங்கள் என்ற நிலையில் தடுமாறியது.

லிதொன் டாஸ் 14 ஓட்டங்களுடனும், ஹசன் மிராஸ் 4 ஓட்டங்களுடனும் இறுதிநாளான நேற்றுக் காலை ஆட்டத்தைத் தொடங்கினர். தடுத்து ஆடுவதை மட்டுமே நோக்காகக் கொண்டு பங்களாதேஷ் களமிறங்கியது.

ஆனால், ஆட்டம் தொடங்கிய சிறிதுநேரத்தில், பிரவீனின் பந்தில் எல்.பி.டபிள்யூ. முறையில் டாஸ் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த இஸ்லாம் தடுப்பாட்டத்தையே கைக்கொண்டார். 30 பந்துகளை எதிர்கொண்டவர் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த தஸ்கின் 33 பந்துகளே தாக்குப் பிடித்தார். அவர் 7 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மறுமுனையில் சற்று தாக்குப் பிடித்து ஆடிய மிராஸூம் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியாக களமிறங்கிய அபு ஜயத் ஓட்டம் எதையும் பெறாமல் பிரவீன் ஜெயவிக்கிரமவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதனால், அனைத்து விக்கெட்களையும் இழந்த பங்களாதேஷ் அணி 227 ஓட்டங்களையே பெற்றது. இதனால், 209 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரவீன் ஜெயவிக்கிரம 5 விக்கெட்களையும், ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்களையும் கைப்பற்றினார்.

முன்னதாக இலங்கை அணி முதல் இனிங்ஸில் 493/7, இரண்டாவது இனிங்ஸில் 194/9 என்ற இலக்குகளை பங்களாதேஷூக்கு நிர்ணயித்தது. பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸில் 251 ஓட்டங்களுக்கும், இரண்டாவது இனிங்ஸில் 227 ஓட்டங்களுக்கும் சகல விக்கெட்களையும் இழந்திருந்தது.

இந்தப் போட்டியில் இரு இனிங்ஸ்களிலுமாக அறிமுக வீரர் பிரவீன் ஜெயவிக்கிரம 11 விக்கெட்களை கைப்பற்றி சாதனை படைத்ததுடன் போட்டியின் நாயகனாகவும் தெரிவானார். தொடர் நாயகனாக திமுத் கருணாரத்ன தெரிவானார். (ஐ)




# திஸர பெரேரா ஓய்வு!

கொழும்பு, மே 04

அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெறுகிறேன் என்று இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரர் திஸர பெரேரா அறிவித்துள்ளார்.

இந்த முடிவை 32 வயதான திஸர பெரேரா தமக்கு அறிவித்ததாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் கூறியுள்ளது.

வரவிருக்கும் பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான ஒருநாள் சுற்றுப் பயணங்களின் போது பல சிரேஷ்ட இலங்கை வீரர்களை கைவிடுவது குறித்து ஆலோசித்து வருவதாக இலங்கை கிரிக்கெட் தேர்வாளர்கள் முன்னர் அறிவித்திருந்தனர்.

இந் நிலையிலேயே திஸர பெரேராவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

திஸர பெரேரா 6 டெஸ்ட் போட்டிகளில் 203 ஓட்டங்களையும், 11 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். இதேபோன்று 166 ஒருநாள் போட்டிகளில் 2,338 ஓட்டங்களை எடுத்ததுடன், 175 விக்கெட்களையும் எடுத்துள்ளார். 51 இருபது - 20 போட்டிகளில் விளையாடி 1,204 ஓட்டங்களை பெற்றதுடன் 175 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அறிமுகப் போட்டியிலேயே பிரவீன் மகத்தான சாதனை!

கண்டி, மே 04

அறிமுக டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்களுக்கு மேல் கைப்பற்றிய முதல் இலங்கை வீரர், 16ஆவது சர்வ தேச வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் பிரவீன் ஜெயவிக்கிரம.

145 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் அறிமுக டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்கள் அல்லது 10 விக்கெட்களுக்கும் அதிகமான விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் 16 வீரர்களே உள்ளனர்.

இந்தப் பட்டியலில் 6 இங்கிலாந்து வீரர்கள், 3 அவுஸ்திரேலிய வீரர்கள், 2 மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள், 2 தென் ஆபிரிக்க வீரர்கள், ஒரு இந்திய வீரர், ஒரு பாகிஸ்தானிய வீரர் மற்றும் ஒரு இலங்கை வீரர் அடங்குகின்றனர்.

கண்டி பல்லேகலையில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தனது டெஸ்ட் அறிமுகத்தை பெற்ற இளம் இடது கை சுழற்பந்துவீச்சாளரான பிரவீன் ஜெயவிக்ரம இப்போட்டியின் முதல் இனிங்ஸில் 92 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களையும், இரண்டாவது இனிங்ஸில் 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் வீழ்த்தி மொத்தமாக 11 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இந்தப் பட்டியலில் 12 ஆண்டுகளுக்கு பின்னர் வீரர் ஒருவர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)






# கொல்கத்தா - பெங்களூர் போட்டி ஒத்திவைப்பு

அஹமதாபாத், மே 04

ஐ.பி.எல். தொடரில் நேற்றிரவு 7.30 மணிக்கு அஹமதாபாத்தில் நடக்கவிருந்த 30 ஆவது லீக் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் விராட் கோலி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும், இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும் மோதவிருந்தன.

கொல்கத்தா அணியில் விளையாடும் வருண் சக்கரவர்த்தி, சந்தீப் வாரியர் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்தே போட்டி ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, சென்னையின் 3 வீரர்களுக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தொடரை தொடர்ந்தும் நடத்துவதில் சிக்கல் ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி.கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : Short Film
6.00 மணி : ட்றெய்லர் டைம்-திரைப்படங்களின் முன்னோட்டக்காணொளிகள்




6.30 மணி : மூவி டோக்கீஸ்-ஆங்கில திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம்-நகைசுவை நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**

12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org